# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No.3 of 2007**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# அன்புக்குரியவர்களே!

*கர்த்தரின் ஆசியையும், பிரசன்னத்தையும் உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து அநுபவித்து வருகிறீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தரின் சத்திய வேதத்தை அறிகின்ற அறிவிலும் வளர்ச்சியடைந்து வர பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறார் என்றும் நம்புகிறேன். உங்கள் கையில் இருக்கும் இந்த இதழ் நல்ல பல ஆக்கங்களோடு உங்களை நாடி வந்திருக்கின்றது. இவற்றின் மூலம் கர்த்தர் தாமே உங்களை வழிநடத்துவாராக.*

*ஜோர்ஜ் முல்லரைப்பற்றிய ஆக்கத்தைப் போதகர் ஸ்டீபன் ரீஸ் எழுதியிருக்கிறார். இது ஏற்கனவே 'பேனர் ஆப் டுருத்' இதழில் ஒருசில மாற்றங்களோடு வெளிவந்திருக்கிறது. நண்பரான ஸ்டீபன் ரீஸ் மாற்றங்கள் செய்யப்படாத முழு ஆக்கத்தையும் எனக்கு அனுப்பினார். அதை உங்களுக்கு தமிழில் வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆக்கத்தின் மூலம் ஸ்டீபன் ரீஸ் நம்மை சிந்திக்க வைத்திருக்கிறார்.*

*ரோமன் கத்தோலிக்க மதம் கிறிஸ்தவத்தோடு தொடர்பில்லாத போலிச் சமயம் என்பதை இருபதுக்கும் மேற்பட்ட காரணங்களோடு விளக்கி இந்த இதழில் ஒரு ஆக்கம் வந்திருக்கிறது. அது உங்களை சிந்திக்க வைக்கும். அதைத் தவிர திருச்சபை வரலாற்றில் பிரான்ஸ் நாட்டின் சீர்திருத்தவாதிகளான ஹியூகனோக்களைப் பற்றியும் இந்த இதழில் வாசிக்கலாம். ரோமன் கத்தோலிக்க மதம் எத்தனை ஆயிரம் மக்களின் உயிரைக் குடித்திருக்கிறது என்பதையும் அதையும் மீறிக் கர்த்தரின் சத்தியம் எத்தனை பேருக்கு ஜீவனை அளித்திருக்கிறது என்பதையும் அதில் நீங்கள் வாசிக்கலாம். திருச்சபையை அநேகர் நம்மினத்தில் தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகிறார்கள். கிறிஸ்தவம் எங்கு உயர்ந்த நிலையிலிருக்கிறதோ அங்கே திருச்சபை உன்னத நிலையிலிருக்கும் என்பதை வேதமும், சபை வரலாறும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய நிலைமையை நம்மினத்தில் நாம் காண்பதில்லை. இந்த இதழில் முறையான திருச்சபை வாழ்க்கையின் அவசியத்தை வலியுறுத்தும் ஒரு ஆக்கத்தையும் நீங்கள் வாசிக்கலாம். ஆவியானவர் உங்களோடு தொடர்ந்து பேசட்டும்; வழிநடத்தட்டும். - ஆசிரியர்.*

[அட்டையில் தமிழகத்தின் சென்னை மாநகராட்சிக் கட்டிடத்தின் ஒரு தோற்றம். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் 1913ல் கட்டப்பட்ட இதை 'ரிப்பன் கட்டிடம்' (Ripon Building) என்று அழைப்பார்கள்.]

# ஜோர்ஜ் முல்லர்

**ஜோர்ஜ் முல்லரைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் தமிழினத்துக் கிறிஸ்தவர்களில் குறைவு. அவருடைய ஊழியத்தைப் பற்றி 1905ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு நூல் மறுபடியும் 2003ல் மறுபதிப்பாக வெளிவந்தது. இதன் தலைப்பு** Autobiography or A Million and a Half In Answer to Prayer. **இதைத் தொகுத்து வெளியிட்டவர்** G. Fred Bergin **என்பவர். இந்நூலையும் ஜோர்ஜ் முல்லரின் ஊழியத்தையும் அவர் பின்பற்றிய வழிமுறைகளையும் ஆராய்ந்து எழுதியிருக்கிறார் போதகர் ஸ்டீபன் ரீஸ்** (Stephen Rees). **ஸ்டீபன் ரீஸ் இங்கிலாந்தில் சீர்திருத்த பாப்திஸ்து திருச்சபையொன்றின் போதகராக இருந்து வருகிறார். ஆங்கிலத்தில் அவர் எழுதியுள்ள ஆக்கத்தை இங்கே தமிழில் தருகிறோம்.**

*ஜோர்ஜ் முல்லர் 1805ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் நாளில் பிறந்தார். அவரைப் பற்றிய இந்த நூல் 1905ல் வெளிவந்தது. இந்த நூலில் காணப்படும் அத்தனை விஷயங்களையும் ஜோர்ஜ் முல்லர் தன் கைப்பட எழுதியிருந்தார். அவர் இறந்த பிறகு அவரைப் பற்றிய இன்னொரு நூலான* Narrative of the Lord's Dealings with George Muller *என்ற நூலில் வெளிவந்தவற்றைப் பயன்படுத்தியும் இந்நூலாசிரியர் முல்லரைப் பற்றிய இந்தத் தொகுப்பினை நமக்கு அளித்திருக்கிறார். இது ஜோர்ஜ் முல்லரைப் பற்றிய தொகுப்பாக இருந்தாலும் ஜோர்ஜ் முல்லர் தன் கைப்பட எழுதியவற்றையே இத்தொகுப்பில் நாம் வாசிக்கிறோம். இது மறுபடியும் வெளியிடப்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியே. ஏனெனில், நூறு வருடங்களுக்குப் பிறகு வாசகர்கள் ஜோர்ஜ் முல்லரின் வாழ்க்கையையும், ஊழியத்தையும் பற்றி வாசித்து அவரைப் பற்றிய தங்களுடைய சொந்த முடிவுக்கு வருவதற்கு இது வாய்ப்பளித்துள்ளது.*

*ஜோர்ஜ் முல்லர் 19ம் நூற்றாண்டின் முக்கியமான கிறிஸ்தவ தலைவர்களில் ஒருவராக இருந்திருக்கிறார் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. சுவிசேஷ கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தை அவர் வகிக்கிறார். அவர்* Open Brethren *இயக்கத்தில் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவராக இருந்ததோடு அந்த இயக்கத்தின் மூலம் சுவிசேஷ கிறிஸ்தவத்திற்கு ஒரு புதிய பாதை வகுத்துத் தந்து இன்றுவரையும் தொடரும்படி அதில் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார். 1832ல் அவரும் அவருடைய நண்பரான* Henry Craik *கும் இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரில் ஒரு திருச்சபையை ஸ்தாப்பிக்குப்படி அந்நகரில் வெறுமனே இருந்த பெத்தெஸ்டா திருச்சபைக் கட்டடத்தை வாங்கினார்கள். ஏழு அங்கத்தவர்களோடு அந்த ஊழியம் ஆரம்பமானது. 1866ல் அது ஆயிரத்துக்கும் மேலானவர்களைக்*

கொண்டிருந்தது. 1898ல் முல்லர் மரித்தபோது, அந்த சபை பத்து சபைகளாக பிரிந்து காணப்பட்டது. அவற்றில் ஆறு சபைகள் முழுத் தனித்துவத்துடன் இயங்கி வந்தன. ஏனைய நான்கும் ஆயிரத்தி இருநூறு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தன. ஜோர்ஜ் முல்லரின் ஊழியங்களின் ஒருபகுதி மட்டுமே பெத்தெஸ்டா திருச்சபை ஊழியம். அவர் வேத அடிப்படையில் கல்வியைத் தருகின்ற ஒரு நிறுவனத்தையும் நிறுவினார் (The Scriptural Knowledge Institute for Home and Abroad). இதன் மூலம் அவர் பிரிட்டனிலும், ஐரோப்பாவிலும் தினக்கல்லூரிகளை நிறுவினார். முல்லருடைய ஆயுட் காலத்தில் 123,000 மாணவர்கள் இக்கல்லூரிகளில் கல்வி பயின்றுள்ளனர். அத்தோடு முல்லர் வேதாகமத்தையும், புதிய ஏற்பாட்டையும், ஏனைய கிறிஸ்தவ இலக்கியங்களையும் இலட்சக்கணக்கில் விநியோகித்துள்ளார். ஒரு டஜனுக்கு மேலான மிஷனரிகளுக்கும் உதவியுள்ள முல்லர் சீன உள்நாட்டு மிஷன் (China Inland Mission) அனுப்பிய முதல் மிஷனரிகளுக்கும் உதவியுள்ளார். அவர் செய்த அத்தனை ஊழியங்களிலும் அவரை எல்லோரும் நினைவுகூரும் ஊழியமாக இருந்தது அவர் பிரிஸ்டலில் ஆஸ்லே டவுனில் ஸ்தாபித்திருந்த அநாதைக் குழந்தைகளுக்கான இல்லமே. ஆரம்பத்தில் சில குழந்தைகளை மட்டுமே கொண்டு ஆரம்பித்த இந்தப் பணி அவருடைய ஆயுட்கால முடிவுக்கு முன்பாக ஐந்து பெரிய இல்லங்களைக் கொண்டதாக ஒரே நேரத்தில் இரண்டாயிரம் குழந்தைகள் வாழக்கூடியதாக வளர்ந்திருந்தது. தன் வாழ்நாளில் முல்லர் 10,024 அநாதைக் குழந்தைகளுக்கு வாழ்வளித்திருந்தார்.

ஜோர்ஜ் முல்லரின் ஊழியப்பணிகள் எல்லாம் ஆச்சரியப்படவைப்பதாக இருந்தன. மக்கள் அவருடைய ஊழியப்பணிகளைவிட அந்தப் பணிகளைச் செய்வதற்காக அவருக்கு பணம் சேர்ந்த விதத்தைப் பார்த்தே ஆச்சரியப்பட்டனர். அதை முல்லரைப் பற்றிய இந்த நூலில் மிகத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. முல்லருடைய உள் நோக்கங்களையும் இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. ஏனைய எல்லா விஷயங்களையும் விட இந்த நூல் ஜோர்ஜ் முல்லர் பணத்துக்காக ஜெபித்த விதத்தைப் பற்றியே அக்கறையோடு பேசுகிறது. அத்தோடு, அந்தப் பணம் எப்படி வந்து சேர்ந்தது என்பதைப் பற்றியும் விளக்குகிறது. இந்நூலின் முதல் அறுபது பக்கங்களில் ஜோர்ஜ் முல்லரின் முதல் இருபத்தி ஏழு வருட வாழ்க்கையைப் பற்றி ஓரளவுக்குத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அதற்குப் பிறகு நூல் முழுவதிலும் பணவாடையே வீசுகின்றது.

இந்நூலில் ஜோர்ஜ் முல்லரின் குடும்பத்தைப் பற்றியோ, அவருடைய சுவிசேஷப் பணிகள் பற்றியோ, சபை வாழ்க்கை பற்றியோ எந்தவிதமான குறிப்புகளும் இல்லை. அவரோடு இணைந்து உழைத்தவர்கள் யார் என்பது பற்றியும் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆரம்பகால சகோதரத்துவ இயக்கத்தின் (Brethren Movement) முக்கிய தலைவர்களில் ஒருவராக ஜோர்ஜ் முல்லர் இருந்திருக்கிறார். அதுபற்றியும் இந்நூலில் எந்த விளக்கமும் இல்லை. 1848ம் ஆண்டில் சகோதரத்துவ இயக்கத்தைப் பெரிதும் பாதித்த 'பெத்தெஸ்டா முரண்பாட்டின்' போது (Bethesda Controversy) ஜோர்ஜ் முல்லர் அதில் பெரும் பங்கு வகித்திருக்கிறார். அது பற்றியும்

இந்நூலில் எந்தக் குறிப்பும் இல்லை. முழு நூலும் முல்லர் ஸ்தாபித்த அநாதைக் குழந்தைகளுக்கான இல்லங்களைப் பற்றியே பேசுகின்றது. இருந்தாலும் அந்த இல்லங்கள் பற்றியும் அங்கு நடந்த ஊழியங்கள் பற்றியும் எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. முல்லருக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இருந்த உறவுகள் பற்றியும் இந்த நூலில் எந்த விளக்கமும் இல்லை. அநாதைக் குழந்தைகளை வளர்த்துப் போஷிக்கத் தேவையான பணத்திற்காகத் தான் எப்படி ஜெபித்தேன் என்றும், அந்தப் பணம் எப்படி வந்து சேர்ந்தது என்பது பற்றி மட்டுமே முல்லர் நூல் முழுவதும் விளக்கு கிறார். அவர் நடத்திய அநாதைக் குழந்தைகளுக்கான இல்லங்களின் ஆத்மீக நிலைமை பற்றியும் முல்லர் இந்நூலில் ஒரு வார்த்தையும் சொல்ல வில்லை. அந்தக் குழந்தைகளின் மனந்திரும்புதலுக்காக முல்லர் ஜெபித்தாரா, அந்த ஜெபங்களுக்கு பலன் கிட்டியிருந்ததா என்பது பற்றி யெல்லாம் முல்லர் இங்கே எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த நூலில் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றியோ, ஊழியப் பணிகள் பற்றிய விளக்கங்களையோ அளிக்காமல் ஒவ்வொரு நாளும் தனக்குத் தேவையான பணம் எப்படிக் கிடைத்தது என்பது பற்றியும், அந்தப் பணத்தைப் பற்றிய கணக்கு வழக்குகளையும் மட்டுமே முல்லர் தந்திருக்கிறார்.

இந்நூலை வாசிக்கின்றபோது, கிறிஸ்தவ ஊழியங்கள் அனைத்திற்கும் தேவையான பணத்தை, அதைச் சேகரிக்க எந்தவொரு முயற்சியும் செய்யாமல், யாரிடமும் கேட்காமல், ஜெபத்தால் மட்டுமே அடைந்து விடலாம் என்பதற்கு முல்லர் உதாரணமாக இருந்தார் என்று நாம் எண்ண வேண்டும் என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. முல்லர் தன்னுடைய ஊழியப்பணிகளுக்காக எவரையும் அனுகி அவர்களிடம் எந்த உதவியும் கேட்கவில்லை. எந்தக் கூட்டத்திலும் தன்னுடைய ஊழியங்களுக்காக முல்லர் பணம் கேட்கவில்லை; பணம் வசூலிக்கவில்லை. ஊழியப் பணி களுக்காக பணம் சேகரிக்க அவர் எந்த முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. நண்பர்கள் அவரை அனுகி ஊழியத் தேவைகள் பற்றிக் கேட்ட போதெல் லாம் அவர் அவர்களிடம் அப்படியான தேவை இருக்கிறது என்ற எண்ணத்தை ஒருபோதும் ஏற்படுத்தவில்லை. அவர் ஒவ்வொரு நாளும் ஜெபம் மட்டுமே செய்தார். அநாதைக் குழந்தைகளுக்கான தேவைகளை நிறைவேற்றும்படியும், ஊழியத்தேவைகளுக்கான உதவிகளைத் தரும்படியும் அவர் ஒவ்வொரு நாளும் ஜெபம் செய்வதில் மட்டும் தவறவில்லை. பல நாடுகளிலும் இருந்து கிறிஸ்தவர்கள் அவருடைய ஊழியத்தேவைகளுக்கான பணத்தை ஒவ்வொரு நாளும் ஆர்வத்தோடு அனுப்பத் தொடங்கினர். அவர் உதவி வந்த அநாதைக் குழந்தைகள் ஒரு நாளும் உணவில்லாமல் கஷ்டப்பட்டதில்லை. பல தடவைகளில் அவருக்குத் தேவையான பணம் கடைசி நிமிடத்தில் எப்படியாவது வந்து சேர்ந்தது. ஊழியத்திற்காக ஒருவரிடத்தில் பணம் கேட்பதில்லை என்றும் கர்த்தரை மட்டுமே நாடி வரவேண்டும் என்பதில் முல்லர் தீவிரமாக இருந்தார். தனக்காக எந்த ஊதியத்தையும் (Salary) பெற்றுக்கொள்வதில்லை என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். பெத்தெஸ்டா திருச்சபையிலிருந்தும் அவருடைய ஏனைய ஸ்தாபனங்களிலும் இருந்தும் அவர் எந்த ஊதியத்தையும் பெற்றுக்

*கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து கர்த்தரிடம் ஜெபத்தில் வந்து கிறிஸ் தவர்களின் உள்ளத்தில் பேசி தன்னுடைய தேவைகளை நிறைவேற்றுமாறு மட்டுமே ஜெபித்து வந்தார். அவர் விசுவாச வாழ்க்கை வாழ்ந்தபடியால் கர்த்தர் அவருடைய விசுவாசத்தை மகிமைப்படுத்தினார். இந்தவிதத்தி லேயே ஜோர்ஜ் முல்லர் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றியும், ஊழியத் தைப் பற்றியும் நமக்கு விளக்கங் கொடுக்கிறார். அவரைச் சார்ந்தவர்களும் அதற்காகவே அவரை நினைவு கூருகின்றனர்.*

*ஜோர்ஜ் முல்லருடைய காலத்துக்கு முன்பு சுவிசேஷ கிறிஸ்தவத்தைச்* (Evangelical Christians) *சார்ந்தவர்களும், திருச்சபைகளும் ஊழியத்திற்கான பணத்தைப் பெறுவதில் முல்லர் பின்பற்றிய கோட்பாடுகளைப் பின்பற்றியதில்லை என்பதை இங்கே நினைவுபடுத்தாமல் இருக்க முடியாது. முல்லர் ஊழியத்திற்காகப் பணத்தைச் வசூலிக்கப் பின்பற்றிய முறை அவர் காலத்தில் உருவான ஓர் புதிய முறை. அதற்கு முன்பாக போதகர்களும், கிறிஸ்தவ ஊழியர்களும் தங்களுடைய வாழ்க்கைக்கான ஊதியத்தைப் பெற்றுக்கொள்வதை வேதபூர்வமானதாகவும், நியாயமானதாகவுமாகவே கருதிச் செயல்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய சபைகளும், ஊழியங்களும் தாங்க முடியாத பெரிய ஊழியத் திட்டங்கள் இருக்குமானால் அவர்கள் தங்களோடு சார்ந்த திருச்சபைகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அத்தேவை களை அறிவித்து அதற்காக ஜெபத்தோடு உதவி செய்யுமாறு கேட்பதையே கடமையாக எண்ணிச் செயல்பட்டிருக்கிறார்கள். ஜோர்ஜ் முல்லர் பிறப்ப தற்கு முன்பாக இங்கிலாந்தில் அருமையாகப் பணிபுரிந்த பிரபல்யமான சுவிசேஷகரான ஜோர்ஜ் விட்பீல்ட்* (George Whitefield) *அநாதைக் குழந்தை களுக்கான இல்லங்களைக் கட்டுவதில் ஈடுபட்டிருந்திருக்கிறார். அவர் பிரசங்கம் செய்திருந்த இடங்களிலெல்லாம் அந்த அநாதை இல்லங்களுக் கான தேவைகளை ஆத்துமாக்களுக்கு அறிவித்து அதற்கு உதவும்படியாக அவர் கேட்கத் தவறவில்லை. முல்லருடைய காலத்தில் திருச்சபை ஊழியப் பணியில் ஈடுபட்டிருந்த பிரபல்யமான 'பிரசங்கிகளின் இளவசரன்' என்று அழைக்கப்பட்ட சார்ள்ஸ் ஸ்பர்ஜனும்* (Charles Spurgeon) *இலண்டனில் அநாதைக் குழந்தைகளுக்கான இல்லங்களைக் கட்டியிருந்தார். அவருங்கூட பெரும் பணக்காரர்களாக இருந்த கிறிஸ்தவர்களிடம் இத்தேவைகளை அறிவித்தும், தன்னுடைய கூட்டங்களில் அவ்வில்லங்களுக்காக காணிக்கை களை எடுத்தும், பலரிடத்தில் இத்தேவைகளை அறிவித்தும் இருந்திருக் கிறார். ஸ்பர்ஜன் ஜோர்ஜ் முல்லரை பெரிதும் மதித்தபோதும் ஊழியத் திற்காக முல்லர் பணத்தைப் வசூலிக்கப் பின்பற்றிய கோட்பாட்டை ஒருபோதும் பின்பற்றியதில்லை.*

*முல்லரையும், ஊழியத்திற்காக பணம் சேகரிக்க அவர் எடுத்த முயற்சி களையும் பற்றி நாம் என்ன கூறமுடியும்? முதலில், கர்த்தருக்காகப் பெருங் காரியங்களைச் செய்ய அவர் எடுத்த முயற்சிகளுக்காக அவரை நாம் பாராட்ட வேண்டும். வேதம் சொல்லுகிறது: "திக்கற்ற பிள்ளைகளும் விதவை களும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது." அன்றாட*

*அப்பத்திற்காகக் கர்த்தரிடம் அன்றாடம் ஜெபத்தில் வந்த முல்லரின் பக்தி விருத்தி நாமும் அவ்வாறு வாழ வேண்டுமென்று நம்மைத் தூண்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய அன்றாட அப்பத்திற்காகக் கர்த்தரில் தங்கி வாழ வேண்டியது அவசியம். ஆனால், தன்னுடைய தேவைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருந்த முல்லரின் செயல் சரியானதா என்பதை ஆராயத்தான் வேண்டும். முல்லரின் கருத்து சரியில்லை என்பதே என்னுடைய முடிவு. முல்லர் அத்தகைய நம்பிக்கையை எங்கிருந்து பெற்றார் என்பது எனக்குத் தெரிய வில்லை; ஆனால், அவருடைய நம்பிக்கை வேதத்தில் பார்க்க முடியாத தொன்று. எருசலேம் நகரில் இருந்த கிறிஸ்தவ திருச்சபை பஞ்சத்தால் வாடியபோது பவுல் அப்போஸ்தலன் கர்த்தரிடம் ஜெபத்தில் வந்து, கர்த்தரே திருச்சபைகளிடம் நேரடியாகப் பேசி எருசலேம் சபைக்கு அவர்கள் உதவி செய்யும்படிச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்காமல், ஏனைய திருச்சபை களுக்கு அந்தத் தேவையைத் தானே தெரியப்படுத்தி அவர்களுடைய உதவியை நாடினார். பஞ்சத்தில் வாடியவர்களுக்கு உதவுவதற்காக ஒரு நிதியை ஏற்படுத்தி திருச்சபைகள் அதற்குக் காணிக்கை அனுப்ப ஏற்பாடு செய்தார். 1 கொரிந்தியர் 16:1-4ம் 2 கொரிந்தியர் 8, 9 ஆகிய அதிகாரங்களும் பவுல் இதை எவ்வாறு மிகவும் அக்கறையோடு திட்டமிட்டு ஏற்பாடு செய்தார் என்பதை விளக்குகின்றன. தன்னுடைய எதிர்பார்ப்புகளின்படி நடந்துகொள்ளாத கிறிஸ்தவர்கள் இந்தக் காரியத்தில் ஆர்வத்தோடு பங்கேற்க வேண்டுமென்று அவர்களை எந்தளவுக்கு வற்புறுத்தியிருக்கிறார் பவுல் என்பதை இந்த வேதப்பகுதிகள் விளக்குகின்றன.*

*வேத அடிப்படையில் அமையாததும், அறிவுபூர்வமில்லாததுமான 'மிஷ்டிகல்'* (Mystical) *ஆத்மீக அணுகுமுறையே ஊழியங்களுக்காகப் பணம் சேர்க்கும் மில்லருடைய வழிமுறைக்கு காரணமாக அமைந்தது. பணம் சம்பந்தமான விஷயங்களில் ஆராய்ந்து திட்டமிட்டு செயல்படுவது ஆத்மீகத் திற்கு எதிரான உலகப்பிரகாரமான செயல் என்று முல்லர் நம்பினார். எந்தத் திட்டங்களையும் முறையாக ஆராய்ந்து அவற்றிற்குத் தேவையான நிதியைக் கணக்கிட்டு அத்தேவைகளுக்கான பணத்தை எப்படித் திட்ட மிட்டுக் கொடுப்பது என்றெல்லாம் கிறிஸ்தவர்கள் சிந்திப்பதை அவர் துளியும் விரும்பவில்லை. எதையும் ஆராய்ந்து பார்க்காமல், எந்தத் திட்டத் தைப் பற்றிய உண்மைகளையும் தெரிந்துகொள்ளாமல் பரிசுத்த ஆவியால் மட்டும் உடனடியாக உந்தப்பட்டு கிறிஸ்தவர்கள் காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும் என்று முல்லர் நம்பினார். இதேவிதமான எண்ணத் தோடேயே முல்லர் சகல ஆத்மீகக் காரியங்களையும் அணுகினார். அந்தந்த நேரத்தில் கர்த்தர் உடனடியாக வெளிப்படுத்தும் வழிகளின்படி கிறிஸ்தவர் கள் வாழ வேண்டும் என்று முல்லர் நம்பினார். பிரிஸ்டலுக்குப் போவதற்கு முன்பாக ஒரு மிஷனரி ஸ்தாபனத்தில் வேலை பார்த்த அவர் அதிலிருந்து விலகினார். அதற்கு அவர் கூறிய காரணம், "மிஷனரி ஊழியங்களில் மனிதர் களின் ஆலோசனையின்படி நடந்து உழைப்பதை என் மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. கிறிஸ்துவின் ஊழியனான நான் எங்கு ஊழியம் செய்ய வேண்டும், எந்த நேரத்தில் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையெல்லாம்*

*மனிதர்களின் வழிநடத்தலின்படியல்லாமல் பரிசுத்த ஆவியினால் மட்டுமே வழிநடத்தப்பட்டு ஈடுபடுவேன்" என்பதுதான். சக விசுவாசிகளின் மூலம் தகுந்த ஆலோசனைகளைத் தந்தும் நம்மைப் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துகிறார் என்ற உண்மை முல்லருக்குப் புலப்படாமல் போனது ஆச்சரியமே. வேதத்தைப் படித்துப் புரிந்துகொள்ளுவதற்கு வேத வியாக்கியான நூல்களை வாசிப்பதை முல்லர் அறவே நிராகரித்தார். வேத வியாக்கியான நூலகள் தரும் அறிவு பொதுவாக நம்மைத் தலைக்கனம் பிடித்தவர்களாக்கும் என்பது அவருடைய எண்ணமாக இருந்தது. எந்தவொரு வேதப் பகுதியையும் புரிந்துகொள்ளுவதற்கு ஜெபத்தாலும், தியானத்தாலும் பரிசுத்த ஆவியில் மட்டுமே தங்கியிருப்பதை முல்லர் விரும்பினார். தனக்கு முன்பு வாழ்ந்திருந்த பக்திவிருத்தியும், வேதஞானமும் மிகுந்த ஞானவான்கள் எழுதிய நூல்களின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நமக்கு வேத அறிவைத் தருகிறார் என்ற உண்மை முல்லருக்கு ஒருபோதும் தோன்றவில்லை. தன்னுடைய பிரசங்க ஊழியத்தைக் குறித்து முல்லர் பின்வருமாறு விளக்குகிறார்: "நான் பிரசங்கத்தைத் தயாரிக்கும்போது என்னை வழி நடத்தும்படியாக பரிசுத்த ஆவியின் அனுமதிக்காகக் காத்திருப்பேன். . . சில வேளைகளில் நான் பிரசங்க மேடைக்கு எந்தத் தயாரிப்போ, வசனமோ கையிலில்லாமலும் போயிருக்கிறேன். பேசுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக ஆவியானவர் எனக்கு வசனத்தைத் தந்தார்." முல்லரின் இந்தப் பிரசங்கத் தயாரிப்பு முறையை அப்போஸ்தலரான பவுல் கையாண்டதில்லை. பவுல் தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கும் ஆத்துமாக்களின் தேவைகளை நிதானித்து அறிந்து வைத்திருந்ததுமட்டுமல்லாமல், "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம் பண்ணினேன்" என்கிறார் (அப்போஸ். 20:20). புத்தியோடு ஆத்துமாக்களின் தேவைகளை ஆராய்ந்து பார்த்தே அவர்களுக்குத் தேவையான பிரசங்க வசனத்தைப பவுல் தெரிவு செய்திருக்கிறார்.*

*ஜோர்ஜ் முல்லரின் வழிமுறைகள் பண விஷயத்தில் மட்டும் நிச்சயம் பயனைத் தந்திருக்கிறதே என்று நீங்கள் நினைக்கலாம். உண்மைதான், ஆனால், முல்லர் மனந்திறந்து நேர்மையோடும், உண்மையோடும் நான் எந்தவிதத்திலும் எவரிடத்திலும் ஒருபோதும் பணத்தேவை பற்றித் தெரிவிக்கவில்லை என்று சொல்லுவாரால் அதை நம்பலாம். உண்மையென்னவென்றால் தன்னுடைய ஊழியங்களுக்குத் தேவையான பணத்தைச் சேர்க்க முல்லர் மிகவும் திறமையான ஒரு வழிமுறையைக் கையாண்டிருக்கிறார். இதை முல்லர் உணர்ந்திருந்தாரோ, இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால், அவர் நிச்சயம் காணிக்கை சேகரிக்க ஒரு வழியைக் கையாண்டிருக்கிறார். அவர் எல்லோரும் அறியக்கூடிய விதத்தில் பணத்திற்காக தான் எவரையும் நாடிப்போகப் போவதில்லை என்ற கோட்பாட்டை வெளிப்படையாகச் சொல்லியிருந்தார். கிறிஸ்தவர்களிடம் இருந்து காணிக்கை பெற்றுக்கொள்ள இது நடைமுறையில் மிகவும் பயனளிக்கக் கூடிய ஒரு திட்டம் என்பதை முல்லர் ஒருபோதும் அறியாமல் இருந்திருக்கலாம். அநேக கிறிஸ்தவர்கள் முல்லருடைய விசுவாசத்தாலும்,*

*அவர் செய்து வருகின்ற ஊழியத்தாலும், வியப்பூட்டுகின்ற செயல்களாலும் உந்தப்பட்டு காணிக்கைகளை அனுப்ப ஆரம்பித்தனர். ஊழியத்திற்காகப் பரிசுத்த ஆவியில் மட்டுமே தங்கியிருக்க வேண்டும் என்ற முல்லருடைய கொள்கை பலருடைய உள்ளத்தையும் கவர்ந்து அவருடைய ஊழியங்களில் ஆர்வம்காட்ட வைத்தது. இதில் நாமும் பங்கேற்க வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் விரும்பினார்கள். தன்னுடைய சபையில் அன்றாடம் உண்மையோடு உழைக்கும் போதகரின் சம்பளத்திற்கு காணிக்கை கொடுப் பதைவிட பிரிஸ்டலில் இருந்த பரிசுத்தரான முல்லருக்கு காணிக்கை அனுப்புவது பலருக்கும் ஒரு விசேஷ உற்சாகத்தை ஏற்படுத்தியது. முல்லருக்குக் காணிக்கை அனுப்பியிருக்கிறோம் என்ற எண்ணம் பண மனுப்பிய கிறிஸ்தவர்களுக்கெல்லாம் உள்ளத்தில் ஒரு திருப்தியையும், ஆனந்தத்தையும் தந்தது. முல்லரின் கொள்கையால் உந்தப்பட்டு காணிக்கையனுப்பிய ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், 'இந்த நேரத்தில் முல்லர் தன்னுடைய காணிக்கைக்காக ஜெபம் செய்து கொண்டிருப்பார்' என்ற எண்ணம் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியது.*

*உண்மையென்னவென்றால் தன்னுடைய அநாதைக் குழந்தைகளுக்கான இல்லங்கள் பற்றி முல்லர் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களுக்கு விபரித் திருந்தார். அது பற்றி இந்த நூலில் வாசிக்கலாம். கூட்டங்களில் அநாதை இல்லங்களின் செயற்பாடுகள் பற்றி அவர் எந்த விபரங்களையும் கொடுக்க வில்லை; அந்தக் கூட்டங்களில் எந்தக் காணிக்கையையும் எடுக்கவில்லை. கர்த்தர் எவ்வாறு தன்னுடைய இல்ல ஊழியங்களில் தலையிட்டு அவற்றை ஆசீர்வதித்தார் என்று மட்டுமே அவர் மக்களுக்கு விளக்கினார். அநாதை இல்லத்தை ஆரம்பித்த முதல் வருடத்திற்குப் பிறகு தன்னுடைய அநாதை இல்லத்தைப் பற்றிய ஒரு நூலை வெளியிட்டு அதில் தன்னுடைய கோட்பாட்டை விளக்கி (அதாவது, ஒருவரிடமும் கையேந்திக் காணிக்கை கேட்பதில்லை, பரிசுத்த ஆவியில் மட்டுமே தங்கியிருப்பேன் என்ற கோட் பாடு), கர்த்தர் தன்னுடைய ஜெபங்களைக் கேட்டுத் தன்னுடைய தேவை களை நிறைவேற்ற அற்புதமாக எவ்வாறு பணத்தை அனுப்பினார் என்பதை விளக்கும் உள்ளத்தை உருக்கிவிடக்கூடிய அருமையான பல உதாரணங் களைக் கொடுத்திருந்தார். தன்னுடைய ஊழியங்கள் பற்றி முல்லர் ஒரு வருடாந்தர அறிக்கையை வழக்கமாக வெளியிட்டு வந்தார். அதில் உருக்க மான பல நிகழ்ச்சிகளை அவர் குறிப்பிட்டிருந்தார். கிறிஸ்தவர்கள் அனுப்பி யிருந்த காணிக்கை விபரங்களை அதில் தந்து, அந்தக் காணிக்கைகள் அனைத்தும் தன்னுடைய ஜெபத்தின் மூலமாக எவ்வாறு தன்னை வந்தடைந்திருந்தன என்பதை உருக்கமாக விளக்கியிருந்தார். இவற்றை வாசித்த கிறிஸ்தவர்கள் இவற்றால் உந்தப்பட்டு இதில் நமக்கும் பங்கிருக்க வேண்டும் என்ற ஆர்வக்கோளாறால் முல்லருக்குக் காணிக்கைகளை அள்ளி அனுப்பி வைத்ததில் ஆச்சரியமில்லை. ஜோர்ஜ் முல்லரின், தன்னைப் பற்றிய இந்த வாழ்க்கை சரிதத்தை வாசித்து முடித்தபோது அவர் ஒன்றும் தெரியாத வரா? அல்லது மிகவும் சாமர்த்தியசாலியா? என்ற குழப்பமே எனக்கு ஏற்பட்டது. எதுவாக இருந்தபோதும் இதையெல்லாம் வாசித்து நான் உள்ளத்தில் துக்கத்தையே அடைந்தேன்.*

இதையெல்லாம்விட துக்கமூட்டுகிற விஷயம் முல்லர் தன்னுடைய திட்டங்களின் தவறுகளை எப்போதும் நியாயப்படுத்துவதுதான். முல்லரின் வாழ்க்கை சரிதத்தில் இருந்து ஓர் உதாரணத்தைப் பாப்போம். ஒரு முறை அநாதை இல்லத்தை நடத்துவதற்கு பணமில்லாமல் போனது. முல்லர், 'கர்த்தர் இன்னும் உதவி அனுப்பவில்லை' என்று சொன்னார். இதைத் தன்னுடைய அநாதை இல்ல ஊழியர்களிடத்தில் நிச்சயம் சொல்ல வேண்டும் என்று முல்லர் தீர்மானித்தார். அவர்களுக்கு நிதி நிலைமையை விளக்கி, கடன் தொல்லையில் இருந்து தப்புவது எப்படி என்று விளக்க மளிப்பதும் அவசியம் என்று தீர்மானித்தார். ஆச்சரியத்துக்கும் மேல் ஆச்சரியமாக 'தன்னுடைய ஜெபத்திற்குப் பிறகு ஒரு ஊழியர் தன்னிடத்தில் இருந்த அனைத்தையும் அநாதை இல்லத் தேவைக்காகக் கொடுத்தார். அன்று பதினாறு ஊழியர்கள், தங்களிடம் இருப்பதையெல்லாம் கொடுக்கா விட்டால் ஜெபிப்பதில் பயனில்லை என்று சொன்னார்கள்' என்று விளக்குகிறார் முல்லர். தங்களுடைய நூல்களைக்கூட விற்று தியாகத்தோடு கொடுத்ததால்தான் அன்று அநாதை இல்லம் இக்கட்டில் இருந்து தப்பியது. சில மாதங்களுப்பிறகு மறுபடியும் அநாதை இல்லம் இக்கட்டைச் சந்திக்க நேர்ந்தது. முல்லர் இதுபற்றி அளிக்கும் விளக்கத்தைக் கவனியுங்கள், 'அநாதை இல்ல ஊழியர்களும் சகல சகோதர சகோதரிகளும் நாம் சந்தித்திருக்கின்ற விசுவாச சோதனையிலும், விசுவாசத்தின் சந்தோஷத்திலும் பங்குபெறும்படியாக நமது நிதிப் பற்றாக்குறையை அவர்களுக்குத் தெரிவிப்பதே கர்த்தரின் தெளிவான சித்தமாக இருந்தது. அதன்படி நாமெல்லோரும் கூடியபோது, அவர்களுக்கு முன் கர்த்தர் மகிமையடையும்படியாக இந்த இக்கட்டான நிலைமை பற்றிய விஷயம் நமக்குள்ளாகவே இருக்க வேண்டும் என்று நான் அவர்களுக்கு சொன்னேன். அதன் பிறகு நாங்களெல்லோரும் சேர்ந்து ஜெபித்தோம் . . .' அதற்குப் பிறகு நடந்ததை இந்நூலில் வாசிக்கும்போது அதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமிருக்கவில்லை. மறுபடியும் அநாதை இல்ல ஊழியர்களனைவரும் தங்களிடம் இருந்த அனைத்தையும் கொடுத்ததால்தான் அந்த நிதிப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டது. நூலில் ஒரு சில பக்கங்களுக்குப் பிறகு முல்லர் இந்த நிகழ்ச்சியை எண்ணிப்பார்த்து பின்வருமாறு எழுதுகிறார், இந்த முறையிலான வாழ்க்கை நம்மைக் கர்த்தரின் சமீபத்தில் அழைத்துச் செல்லுகிறது. அவர் ஒவ்வொரு நாளும் நம்முடைய தேவைகளைத் தானே கணக்கிட்டுப் பார்த்து தேவையான உதவிகளை அனுப்பி வைக்கிறார்.' முல்லரின் இந்த வார்த்தைகளில் உண்மை இல்லை. எவரிடமும் பணத்தேவை பற்றிச் சொல்லவே மாட்டேன், வாயால் உதவிகளைக் கேட்கவே மாட்டேன் என்பது என்னுடைய கொள்கை என்று ஊர்தெரிய சொல்லிவிட்டு அன்றைக்கு அநாதை இல்ல ஊழியர்கள் அனைவருக்கும் தம்முடைய தேவை யையும் வெளிப்படையாக அறிவித்துவிட்டு ஏதோ கர்த்தர் அந்தத் தேவையைத் தானே அறிந்து இடையிட்டுத் தீர்த்ததாக சொல்லுவது எப்படிச் சரியாகும். இது முறையே இல்லை.

இறையியலறிஞரான டெப்னி (R. L. Dabney) தனக்கே உரிய சாமர்த்தியத்தோடு இதைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார், 'முல்லர் பயன்படுத்திய

வழிமுறை பிரிட்டனின் கிறிஸ்தவர்களின் மனநிலைக்குப் பொருந்திப் போவதாக இருந்தது. அவர் தவறான எண்ணத்தோடு திட்டமிட்டு இதைச் செய்தாரோ இல்லையோ, அந்நாட்டு மக்களின் இயற்கையான மனப் பாங்கைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டு செயற்படுத்திய சரியான முறையாக அது இருந்தது. தாழ்மையை வெளிப்படுத்துவதாகவும், மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அவருடைய வழிமுறைகள் இருந்தபோதும் பணம் வசூலிப்பதற்குத் தேவையான அத்தனை உலகப்பிரகாரமான அம்சங்களும் அதில் அடங்கியிருந்தன. முல்லர் மட்டுமே இத்தகைய வழிமுறையைப் பின்பற்றினார் என்பதை நாம் நினைவில் வைத்திருப்பது அவசியம். பிரிட்டனில் இருந்த அத்தனை கிறிஸ்தவ திருச்சபைகளும், ஸ்தாபனங்களும் இந்த முறையைப் பின்பற்றியிருந்தால் அது வெற்றி யடைந்திருக்கும் என்று சிந்திக்கின்ற எந்த மனிதனாவது ஒத்துக்கொள்ளு வானா?' (Dabney's Discussions Volume I, pp 204) ஜோர்ஜ் முல்லரின் ஜெபமுறையையும், விசுவாசத்தோடு அதற்கிருந்த தொடர்பையும் ஆராய்ந்து பிரபலமான இறையியலறிஞர் டெப்னி வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்துக்களை ஆராயந்து பார்ப்பது வாசகர்களுக்கு அதிக பயனளிக் கும்.

ஜோர்ஜ் முல்லரின் தவறுகளைப் பற்றி இந்தளவுக்கு நாம் ஆராய வேண்டிய அவசியம் என்ன? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான ஒரே காரணம், முல்லரின் தற்பெருமை மிகுந்த அறிவிப்புகளும், தவறான வேதபூர்வமற்ற சிந்தனைகளும் அநேக கிறிஸ்தவர்களைப் பாதித்திருப்பது தான். சுவிசேஷ கிறிஸ்தவத்தை (Evangelical Christianity) மில்லரின் தவறான சிந்தனைகள் இன்றுவரை பாதித்து பலவீனப்படுத்தியிருக்கின்றன. அமெரிக்க இறையியலறிஞர் டெப்னி சுட்டிக்காட்டிய பயங்கரமான குருட்டார்வ முள்ள வழிமுறைகள் அநேக கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் இன்று 'விசுவாசத்தின் அடிப்படையிலான ஊழியத்தில்' (Faith based ministry) ஈடுபட்டிருப்பதாக பறைசாட்டிக்கொள்கின்றன. இதற்குப் பொருள் அவர்கள் தங்களுடைய ஊழியக்காரர்களுக்கு நிலை யான சம்பளம் கொடுப்பதில்லை என்பதுதான். அந்த ஊழியக்காரர்கள் விசுவாச வாழ்க்கை வாழும்படியாக எதிர்பார்க்கப்படுகிறார்கள். அதாவது, கர்த்தர் அவர்களுக்குத் தேவையான பணத்தை அனுப்பி உதவ அவர்கள் ஜெபத்தில் தரித்திருந்து வாழ வேண்டும் என்பது அதற்குப் பொருள். உண்மையில் அந்த ஊழியக்காரர்கள் பலருக்கும் ஜெபக் குறிப்புகள் எழுதி அனுப்பி அதில் சாடைமாடையாக தங்களுடைய தேவைகளைத் தெரிவிக் கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். வாசிக்கிறவர்கள் வியக்கும்படியாக ஊழியங்கள் எப்படிப் பெருகி வழிகின்றன என்று நடக்காதவற்றையும் நடந்தவைகள் போல் மெருகூட்டி எழுதுகிறவர்களுக்கு அதிக காணிக்கை வந்து சேருகின்றது. உலகப்பிரகாரமானதும், செயற்கையானதுமான இந்த வழிமுறைகளைவிட எத்தனை வித்தியாசமானது பொது அறிவுக்குப் புலப்படும்படியான இயேசு கிறிஸ்துவின் ஞானவார்த்தைகள். இயேசு சொல்லுகிறார், 'உழைக்கிறவன் தன்னுடைய சம்பளத்துக்கு தகுதியானவன்'.

*எப்போதாவது, எப்படியாவது, யாராலாவது உந்தப்பட்டு ஊழியங்களுக்கு இருந்திருந்து பணம் கொடுக்கிற தனிப்பட்ட மனிதர்களை நம்பி கிறிஸ்தவ ஊழியர்கள் ஒரு நாளும் ஊழியம் செய்யக்கூடாது. முடிந்தவரை ஒவ்வொரு கிறிஸ்தவ ஊழியக்காரருக்கும் நிலையான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் அவர்களுடைய அவசியமான தேவைகளைத் தீர்த்துவைக்கக் கூடிய சம்பளமாக அது இருக்க வேண்டும்.*

*பரிசுத்த ஆவியின் உந்துதல் தங்களுடைய உள்ளத்தில் ஏற்பட்ட பிறகே காணிக்கை கொடுப்போம் என்று காத்திருப்பவர்கள் காணிக்கை கொடுக்காமலே இருப்பதே நல்லது. இல்லாவிட்டால் அவர்கள் தேவையான ஊழியங்களுக்குக் கொடுக்காமல் தங்களுடைய சொந்தக் கற்பனைகள் வழி நடத்துகிறபடி எங்காவது காணிக்கை கொடுக்கலாம். கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியாகவும், முறைப்படுத்தியும், தியாகத்தோடும், அறிவுபூர்வமாக சிந்தித்தும் காணிக்கை கொடுக்க வேண்டும் என்கிறது வேதம். இதில் நான் முல்லரின் 'ஆத்மீக வழிமுறையை' விட ஜோன் வெஸ்லி ஞானமாக சொன்ன வழியையே பின்பற்ற விரும்புகிறேன். வெஸ்லி சொன்னார், 'உன்னால் முடிந்தவற்றையெல்லாம் அடையப் பார்; உன்னால் முடிந்தவற்றையெல்லாம் சேமித்து வை; உன்னால் முடிந்தவற்றையெல்லாம் கொடுக்கப் பார்.' காணிக்கை கொடுப்பதற்கு நமக்கு கர்த்தரிடம் இருந்து விசேஷமான வழிநடத்தல் எதுவும் அவசியமில்லை. முடிந்தவற்றையெல்லாம் நாம் கர்த்தருக்காக எப்போதும் கொடுக்கப் பார்க்க வேண்டும். 2 கொரிந்தியர் 8:3 சொல்லுவது போல், நம்முடைய 'திராணிக்கு மிஞ்சியும்' காணிக்கை கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். முதலில் நாம் எந்தத் திட்டத்தையும் சிந்தித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு நம்முடைய பொதுவான அறிவைப் பயன்படுத்தி நமது காணிக்கையை எங்கு கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமோ அந்த ஊழியத்துக்குக் கொடுக்கத் தீர்மானிக்க வேண்டும். அதற்குப் பிறகு அதை உடனடியாகக் கொடுத்துவிட்டு கர்த்தர் அதை நல்ல முறையில் தன்னுடைய இராஜ்ய வளர்ச்சிக்காகவும், தம்முடைய மகிமைக்காகவும் பயன்படுத்தும்படி ஜெபிக்க வேண்டும். (இதையெல்லாம் கிறிஸ்தவர்கள் ஒரு நல்ல திருச்சபையில் அங்கத்தவராக இருந்து அந்தச் சபைகள் மூலமே செய்ய வேண்டும் என்பது சொல்லித்தெரிய வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.)*

*முல்லருடைய விசுவாசம் பற்றிய கோட்பாட்டின்படி கிறிஸ்தவத்திற்கு எத்தனைத் துன்பமும், வெட்கமும் வந்து சேர்ந்திருக்கிறது. பண விஷயத்தில் மட்டுமல்லாமல் எத்தனையோ ஆத்மீக விஷயங்களையும் அது பாதித்திருக்கிறது. 'விசுவாச ஊழியங்களைச்'* (Faith mission) *செய்கிறவர்கள் நிறைவேறாத தங்களுடைய திட்டங்களையும், தவறுகளையும் பற்றி ஒருபோதும் விளக்குவதில்லை. எந்தவித சம்பளமும் கொடுக்கப்படாமல் உழியம் செய்ய அனுப்பி வைக்கப்பட்டவர்களைப் பற்றியும், நிதிப்பற்றாக்குறையால் ஆறுமாதங்களுக்குப் பிறகு ஊழியத்தை விட்டுவிட்டுத் திரும்பி வந்தவர்களைப் பற்றியும், 'விசுவாசத்தின்' அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேறாமல் நின்று போன திட்டங்களைப் பற்றியும், கிடைக்கும் என்று பகிரங்கமாக அறிவித்து விட்டு பின்பு கிடைக்காமல் போன 'ஆசீர்வாதங்களைப்' பற்றியும் அவர்கள்*

ஒருநாளும் விளக்குவதில்லை. தங்களுடைய தவறுகளையும் உணருவதில்லை. முல்லரைப் போலவே இந்த 'விசுவாச ஊழியங்களைச்' செய்கிறவர்கள் தங்களுடைய தவறுகளுக்கெல்லாம் அநேக காரணங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை நியாயப்படுத்தப் பழகியிருக்கிறார்கள்.

முல்லருடைய ஊழியம் நிச்சயம் கடின உழைப்பைப் பற்றியும், ஜெப வாழ்க்கையைப் பற்றியும், ஊழியத்தைப் பற்றியும், ஊழியத்தில் இருக்க வேண்டிய ஆர்வத்தைப் பற்றியும் நம்மைச் சிந்திக்க வைக்க வேண்டும். அதேவேளை தாலந்துகள் கொண்ட ஒரு தனி மனிதனால் உருவாக்கப் பட்ட கோட்பாடுகளை ஆராய்ந்து பார்க்காமல் நம்பிப் பின்பற்றுவதனால் ஏற்படுகின்ற ஆபத்தைக் குறித்து எச்சரிப்பதாகவும் முல்லரின் ஊழியம் அமைந்திருக்கிறது. அன்றிருந்த பரவலான வரலாற்றுக் கிறிஸ்தவ சிந்தனை களைத் துப்பரவாக அலட்சியம் செய்து அவற்றில் இருந்து விலகி நின்றார் ஜோர்ஜ் முல்லர். பரிசுத்த ஆவியானவர் தனக்கு நேரடியாக எல்லா வேத அறிவையும் தருவார் என்ற தவறான நம்பிக்கையில் அவர் காலத்தால் நிரூபிக்கப்பட்ட விசுவாச அறிக்கைகளையும், வேத வியாக்கியான நூல் களையும், அருமையான இறையியல் நூல்களையும் ஒதுக்கி வைத்தார். மிகுந்த ஆபத்தை விளைவிக்கக்கூடிய இத்தகைய தவறான ஆத்மீக நடவடிக்கையின் மூலம் எப்படியோ தன்னை மட்டும் தப்புவித்துக் கொண்டார் முல்லர். ஆனால், அவருடைய இறையியல் குளறுபடிகளின் நெடுங்காலப் பாதிப்பை எவரால் கணக்குப் போட முடியும்?

---

*ஜோர்ஜ் முல்லர் பிரிஸ்டலில் தன்னுடைய ஊழியத்தை நடத்திய விதத்தை அவருடைய வாழ்க்கை சரிதத்தில் இருந்து ஆராய்ந்து அவருடைய 'விசுவாச ஊழிய' நடவடிக்கைகள் சுவிசேஷக் கிறிஸ்தவத்தில் ஏற்படுத்திய பாதிப்புகளை வெளிப்படுத்தியிருக்கிறார் போதகர் ஸ்டீபன் ரீஸ். இதை வாசித்துவிட்டு எவ்வளவோ நல்ல பணிகளைச் செய்திருக்கிற முல்லருடைய குறைகளை சுட்டிக்காட்ட வேண்டுமா? நல்லதை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை விட்டுவிடலாமே என்று சிலர் சொல்லுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அது நம்மினத்தில் ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிற தவறான சிந்தனை. அன்பின் பெயரில் பெருந்தவறுகளைக்கூடப் பாய்க்குக் கீழே போட்டு மறைத்துப் பழகிப்போன சுபாவம். குற்றம் சொல்லக்கூடாதென்று சொல்லிச் சொல் லியே குற்றங்களை நாறும் குட்டைகளாக நாடெங்கும் நாம் உருவாக்கிவிட்டிருக் கிறோம். ஜோர்ஜ் முல்லர் எல்லோரையும் போல ஒரு சாதாரண மனிதர்தான். அவர் நல்ல கிறிஸ்தவர் என்பதில் சந்தேகமேயில்லை. நல்ல பணிகள் பல செய்திருக்கிறார் என்பதும் பேருண்மை. அவருடைய வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சில நல்ல விஷயங்கள் இருக்கின்றன என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவற வில்லை. அதற்காக கிறிஸ்தவத்தைப் பாதிக்கின்ற, வேத போதனைகளுக்கு முரணான, முல்லர் விட்ட பெருந் தவறுகளை மறைத்துவிட முடியாது. அவற்றைத் தவறுகளாகப் பார்க்கத் தெரியாதவர்களுக்கு விஷயம் தெரியவில்லை என்றுதான் அர்த்தம். முல்லரின் வழிமுறைகளின் பாதிப்பைத் தமிழினத்துக் கிறிஸ்தவத்தில் இன்று நாம் அன்றாடம் பார்க்கிறோம். இந்த ஆக்கத்தின் மூலம் ஆசிரியர் நமக்குப் பெரு நன்மை செய்திருக்கிறார். 'சென்டிமென்டலாக' நடந்து கொள்வதை நாம் விட்டுவிட்டு வேதபூர்வமாக இனியாவது சிந்தித்து நடக்க ஆரம்பிக்க வேண்டும். – ஆசிரியர்.*

# பிரான்ஸின் ஹியூகனோக்கள்

ப தினாறாம் நூற்றாண்டில் சுவிட்சர்லாந்தில் மட்டுமல்லாது ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளான பிரான்ஸ், நெதர்லாந்து, ஹங்கேரி, ஸ்பெயின், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் திருச்சபை சீர்திருத்தம் தீ போலப் பரவ ஆரம்பித்தது. பிரான்சில் ஏற்பட்ட திருச்சபை சீர்திருத்தம் அதை ஆண்ட அரசர்களோடு தொடர் புடையதாக அமைந்திருந்தது. இந்தக் காலப்பகுதியில் பிரான்சின் மன்ன னாக இருந்தவன் முதலாம் பிரான்சிஸ். ஆரம்பத்தில் திருச்சபை சீர்திருத்தத் தில் பிரான்சிஸ் அதிக அக்கறைகாட்டவில்லை. கத்தோலிக்க மதத்தோடு சீர்திருத்தவாதிகளுக்கு இருந்த அறிவு சார்ந்த போராட்டமாக மட்டுமே அதைக் கருதினான் அரசன். அவனுக்கு ஆத்மீக ஈடுபாடோ அதில் எந்த விதமான அக்கறையோ இருக்கவில்லை. 1516ல் அரசன் அரசியல் காரணங் களுக்காக போப்போடு ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டான். வெகு சீக்கிரத்திலேயே மார்டின் லூத்தருடைய போதனைகளிலும், கல்வினுடைய போதனைகளிலும் அதிக அக்கறைகாட்டிய பிரான்ஸ் தேசத்தவர்கள் தங்களை ஆபத்து நெருங்கி வருவதை உணர்ந்தனர். சீர்திருத்தவாதிகளுக்கும் அரசனுக்கும் பிரச்சனை ஏற்படாமல் இருப்பதற் காகவே பிரான்ஸைச் சேர்ந்த ஜோண் கல்வின் தன்னுடைய நூலை பிரான்ஸின் அரசனுக்கு அர்ப்பணித்திருந்தார். ஆனால், லூத்தருடைய போதனைகளை நாட்டில் அநேகர் ஆர்வத்துடன் பின்பற்ற ஆரம்பிக்க பிரான்சிஸ் ஆத்திரங்கொண்டு அவர்களை உயிரோடு கொளுத்த ஆரம்பித் தான். 1545ல் ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்ட தோடு சிறையிலும் அடைக்கப்பட்டனர். இருபத்திரெண்டு நகரங்களும் கிராமங்களும் அடியோடு அழிக்கப்பட்டன.

1547ல் பிரான்சிஸ் இறக்க அவனுடைய மகன் இரண்டாம் ஹென்றி அரசனாக பதவி ஏற்றான். அவன் தன்னுடைய தந்தையைவிடவும் மோசமாக நாட்டில் சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தான். இதனால் அநேகர் அகதிகளாக ஜெனீவாவுக்குபோய் வாழ நேர்ந்தது. அகதிகளால் ஜெனீவா இக்காலத்தில் நிரம்பி வழிந்தது. அநேக இளைஞர்கள் ஜெனீவாவில் வேதப் பயற்சி பெற்று எதிர்ப்புகளையும், மரணத்தையும் பொருட்படுத்தாது மீண்டும் பிரான்ஸுக்குத் திரும்பி வந்து சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டார்கள்; நூல்களையும், கைப்பிரதிகளையும் விநியோகித்தனர். இவ்வேளையில் ஜெனீவாவில் அகதியாக இருந்து பணிபுரிந்து வந்த கல்வின் தன்னுடைய நாட்டு மக்களைப் பார்த்து, “கற்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள், உங்களுக்கு அவற்றை அம்பு களாக மாற்றி அனுப்பி வைக்கிறோம்” என்று செய்தியனுப்பினார்.

*அதாவது, இங்கு வருகிறவர்களை சீர்திருத்தத்தைப் பரப்பும் ஆயுதங்களாக மாற்றி அனுப்புவோம் என்பதே கல்வின் செய்தியின் பொருளாக இருந்தது. பிரான்ஸின் அரசன் நூல்கள் விநியோகிப்பதையும், வீடுகளிலும், வேளைத் தளங்களிலும் இருந்து வேதப் படிப்புகளில் ஈடுபடுவதையும் தடை செய் தான். அரச அதிகாரிகள் அடிக்கடி நாட்டின் அச்சுக்கூடங்களுக்கு வருகை தந்து அச்சிடும் நூல்களை ஆராய்ந்தார்கள். பிரான்ஸுக்கு உள்ளே வந்த அத்தனைப் பொருட்களும் கடுமையான சோதனைக்குள்ளாயின. இத்தனை அடக்குமுறைகளை அரசு கையாண்டபோதிலும் சீர்திருத்தம் இரகசியமாக பிரான்ஸில் தொடர்ந்து வளர்ந்தது. அரசனுடைய அதிகாரம் குறைவாக இருந்த இடங்களில் அது வெளிப்படையாகவே வளர்ந்தது. 1559ல் இரண்டாம் ஹென்றி ஒரு விபத்தில் சிக்கி இறந்தான்.*

*1556ல் இருந்து பிரான்ஸின் சீர்திருத்தவாதிகள் 'ஹியூகனொக்கள்' என்று அழைக்கப்பட்டனர். இந்தப் பெயர் அவர்களுக்கு ஜெனீவாவில் கொடுக்கப் பட்டது. ஜெனீவாவுக்கு அகதிகளாகப் போனவர்கள் திரும்பி நாட்டுக்கு வர இந்தப் பெயர் அவர்கள் மூலம் எங்கும் பரவ ஆரம்பித்தது. பிரான்ஸின் வடபகுதியில் சீர்திருத்தத்திற்கு அதிக ஆதரவிருந்தது. அங்கேயே அது பலத்தோடு வளர்ந்தது. நாட்டின் கீழ்மத்திய வகுப்பில் இருந்தவர்கள் மத்தியிலும், சாதாரண மக்கள் மத்தியிலுமே சீர்திருத்தவாதத்திற்கு ஆதரவு அதிகம் இருந்தது. பெரும்பாலான உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கத்தோலிக்க மத ஆதரவாளர்களாக இருந்தனர். நாட்டில் 65 கல்லூரிகளைக் கொண்டு இயங்கி வந்த முக்கிய பல்கலைக் கழகமும் கத்தோலிக்க மதத்தையே தொடர்ந்து ஆதரித்து வந்தது.*

*இரண்டாம் ஹென்றியின் மரணத்திற்குப் பிறகு அவனுடைய மகன் இரண்டாம் பிரான்சிஸ் பதினாறு வயதில் அரசனானான். அவன் நீண்ட காலம் ஆளமுடியாமல் இறந்தான். அவனுக்குப் பின் அவனுடைய சகோதரன் ஒன்பதாம் சார்ள்ஸ் பதிவிக்கு வந்தான். அவனுக்கு வயது பத்தாயிருந்ததால் நிர்வாகப்பொறுப்பை அவனுடைய தாய் கெதரின் டீ மெடிசி* (Catherine de Medici) *கவனித்துக்கொண்டாள். ஆரம்பத்தில் கெத்தரின் டீ மெடிசி கத்தோலிக்கர்களுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த முனைவதுபோல் நடந்துகொண் டாலும் அவளுடைய உள்நோக்கம் சீர்திருத்தவாதிகளை அடியோடு ஒழிப்பதாகவே இருந்தது. அதை நிறைவேற்றுவதற்காக அவள் ஒரு திட்டத்தை வகுத்தாள். அதன்படி நெவேரி என்ற ஸ்பெயினுக்குப் பக்கத் திலிருந்த ஓர் அரசின் தலைவனான இளவரசன் ஹென்றிக்கு பிரான்ஸின் அரசனும் தன்னுடைய மகனுமான ஒன்பதாம் சார்ள்ஸின் தங்கையான கத்தோலிக்க இளவரசி மார்கிரெட்டை திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தாள். நவேரியின் ஹென்றி ஒரு புதிய ஹியூகனோவாக இருந்தான். இந்தத் திருமணத்திற்கு பல பகுதிகளிலும் இருந்து முக்கிய பிரமுகர்கள் வரவிருந்தார்கள். அவர்களில் ஹியூகனோத் தலைவர்களில் ஒருவரான அட்மிரல் கெலினியும் அடங்கியிருந்தார். கெத்தரினின் இரகசியத் திட்டம் ஹியூகனோக்களில் எவருக்கும் தெரியாதிருந்தது.*

*அன்று ஆகஸ்ட் 24ம் நாள், 1572ம் வருடம், புனித பர்த்தலோமியூ தினம். திருமணமும் அதற்குப் பிறகு நடந்த விருந்துபசாரங்களும் முடிவடைவதற்கு முன்பாக அத்தினத்திலே வரலாற்றில் இதுவரை நிகழ்ந்துள்ள மோசமான சம்பவங்களில் ஒன்று நிகழ்ந்தது. அன்று கெத்தரின் அரசனான தன்னுடைய மகனிடத்திலே போய், திருமணத்தில் கலந்துகொள்ள வந்திருக்கும் ஹியூகனோக்கள் அரச குடும்பத்தவரையும், கத்தோலிக்க மதத்தலைவர்கள் அனைவரையும் கூண்டோடழிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அதைத் தடைசெய்வதானால் அங்கு வந்திருக்கும் அத்தனை சீர்திருத்தவாதிகளையும் அவர்கள் வெளியேறுவதற்கு முன்பாக நகருக்குள்ளேயே கொலை செய்வது அவசியம் என்றும் சொன்னாள். இதை ஏற்கனவே ஒரு தாளில் எழுதித் தயாராக வைத்திருந்த கெத்தரின் அதில் கையெழுத்திடும்படி அரசனைக் கேட்டாள். பலவீனமானவனாக இருந்த அரசன் முதலில் அதைச் செய்யத் தயங்கினான். தன்னுடைய மக்களுக்கு அக்கொடிய தண்டனையை அளிக்க அவன் விரும்பவில்லை. ஆனால், தாயின் தொல்லை பொறுக்கமுடியாமல் அவள் சொன்னபடி செய்த அரசன், "ஆனால், என்னைக் குற்றம் சொல்லும் படி ஒரு ஹியூகனோவாவது பிரான்ஸில் உயிரோடு இல்லாமல் இருக்கும்படி இதை முடித்துவிடு; நீ செய்யத் தீர்மானித்ததை உடனடியாகப் போய்ச்செய்" என்று சொன்னான்.*

*பிரான்ஸின் தலைநகரான பாரிசில் இருந்த கொடியவர்களுக்கு அன்றைய நாள் திருநாளாக இருந்தது. நெவேரியின் ஹென்றியும், அவனை மணந்த மார்கிரெட்டும் மட்டுமே அன்று உயிர் தப்ப முடிந்தது. அந்த ஆகஸ்ட் 24ம் நாள் நதரில் இருந்த அத்தனை ஹியூகனோக்களும், அவர் களின் தலைவர்களும் கொல்லப்பட்டனர். அட்மிரல் கொலினி முதலில் கொல்லப்பட்டார். அவருடைய தலை வெட்டப்பட்டு அக்காலத்தில் போப்பாக இருந்த பதின்மூன்றாம் கிரெகரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அடுத்த மூன்று நாட்களுக்கு கொடியவர்கள் ஹியூகனோக்களைத் தேடித் தேடிப்பிடித்துக் கொலை செய்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அகோர மாக உயிரிழந்தனர். பாரிசில் இரத்த வெள்ளம் கரைபுரண்டோடியது. பிரான்ஸின் ஏனைய நகரங்களிலும் ஹியூகனோக்களைக் கொலை செய்யும் படி அரச கட்டளையிடப்பட்டது. இது ஸ்பெயினின் மன்னனுக்கும், போப்புக்கும் பேரானந்தத்தை அளித்தது. போப் கிரெகரி ஆலய மணியை அடித்து இதைக் கத்தோலிக்க மதத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கொண் டாடினார்.*

*இத்தனைக் கொடூரமான செயல்களுக்கு மத்தியிலும் அன்றைக்கு நான்கில் மூன்று ஹியூகனோக்கள் உயிர்தப்பினர். ஹியூகனோ போதகர் களில் இருவர் மட்டுமே அன்று உயிரிழந்தனர். கொடியவர்கள் போதகர் களையே முக்கியமாகத் தேடித்திரிந்த போதிலும் கர்த்தரின் கிருபையால் ஏனைய போதகர்கள் உயிர்பிழைத்தனர். ஒரு போதகர் மூன்று நாட்கள் வைக்கோல் போரில் தவறி விழுந்து அதற்குள்ளேயே இருந்ததால் உயிர் தப்பினார். அந்த மூன்று நாட்களுக்கும் அவர் பக்கத்தில் இருந்த கோழி யிட்ட முட்டைகளை நாளுக்கு ஒன்றாக சாப்பிட்டே உயிர் வாழ்ந்தார். இது கர்த்தரின் அற்புதத்தினாலேயே நிகழ்ந்தது.*

*இதற்குப் பிறகு அரசனான ஒன்பதாம் சார்ள்ஸ் அதிக நாட்கள் உயிர் வாழவில்லை. தனது 24ம் வயதில் அவன் 1574ல் இறந்தான். கடைசி நாட்களில் அவன் தான் செய்த கொடுமையை நினைத்து வருந்தினான். அது அவனுடைய மனநிலையையும் பாதித்தது. கெத்தரின் கடைசிக் காலம் வரை தான் செய்த கொடுமைகளுக்காக வருந்தவில்லை. தன் வாழ்நாளில் அவள் யேசபேலைப் போலவே கொடியவளாக வாழ்ந்தாள். அவள் 1589ம் வருடம் கத்தோலிக்கர்களாலும், சீர்திருத்தவாதிகளாலும் வெறுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் இறந்தாள். அவள் இறந்தபோது அவளுக்காக ஒருவரும் கண்ணீர்விடவில்லை.*

*நெவேரியின் ஹென்றி நாலாம் ஹென்றியாக மூன்றாம் ஹென்றிக்குப் பிறகு பிரான்ஸின் அரசனானான். அவன் ஒரு ஹியூகனோவானதால் (சீர்திருத்தவாதி) சீர்திருத்தவாதிகளுக்கு நல்ல காலம் ஆரம்பமாவதுபோல் தோன்றியது. கத்தோலிக்கர்கள் அவனை அரசனாக ஏற்றுக்கொள்ள மறுத்த தால் அவனுக்கும் அவர்களுக்கும் இடையில் போர் தொடங்கியது. ஹென்றி பல வெற்றிகளை அடைந்து பாரிஸ் நகரை சுற்றி வளைத்தான். இறுதியில் ஸ்பெயின் அரசனின் படை நெதர்லாந்தில் இருந்து வந்து அதை விடுவித்தது. ஹென்றி கத்தோலிக்க மதத்தை நாட்டின் மதமாக அங்கீகரிக்க சம்மதித்தான். ஆனால், அவன் தொடர்ந்து சீர்திருத்த கிறிஸ்தவனாகவே இருந்தான். அவனுடைய இந்த முடிவு இருபகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. இறுதியில் அவன் கத்தோலிக்கர்களுக்கு இடங்கொடுத்து அதை நாட்டின் மதமாக அங்கீகரித்தது மட்டுமல்லாமல் அதுவே மெய்யான சபையென்று அறிவித்து அதன் வழிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியளித்தான். இதற்கு பல காரணங்களை ஹென்றி தெரிவித்தபோதும் உண்மையான காரணம் அவன் மெய்யான சீர்திருத்த கிறிஸ்தவனாக இல்லாதிருந்ததுதான். அவன் பல நல்ல தகுதிகளைக் கொண்டிருந்தபோதும் தன்னுடைய அரசியல் வெற்றிகளுக்காக சத்தியத்தை விற்பதற்குத் தயாராக இருந்தான். அவன் சத்தியத்திற்காகப் போராடுபவனாக இருக்கவில்லை. "இளவரசர்களில் நம்பிக்கை வைக்காதீர்கள்" என்ற ஹியூகனோக்களின் வார்த்தைகள் சரியாகவே இருந்தன.*

*ஹென்றியின் இந்த சடுதியான செய்கைகளால் ஹியூனோக்களுக்கு பேரா பத்து ஏற்படும் போல் தோன்றியது. ஆனால், நல்ல வேளையாக 1598ல் கொண்டுவரப்பட்ட பிரபலமான நெண்டஸ்* (The edict of Nantes) *சட்டத்தால் புரொட்டஸ்தாந்தியர்களின் (சீர்திருத்த கிறிஸ்தவர்கள்) நலன்கள் பாதுகாக் கப்பட்டன. இதன் காரணமாக பிரான்ஸில் மதசுதந்திரம் நிலவியது. பிரான்ஸில் ஹியூகனோக்கள் குறிப்பிட்ட பகுதிகளில் தங்களுடைய கோட் பாடுகளின்படி ஆராதனை செய்யவும், கல்லூரிகளை நிறுவவும், நூல்களை அச்சடித்து வெளியிடவும் சுதந்திரம் கிடைத்தது. அவர்கள் அரசனுக்கு செலுத்திய காணிக்கை இறுதியில் அவர்களுடைய ஊழியங்களை வளர்ப்ப தற்காக பயன்படுத்தப்பட்டது. நான்காம் ஹென்றி உயிரோடிருக்கும்வரை இந்த சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது. 1610ல் ஹென்றி அவனுக்குக் கீழ் பணிபுரிந்த* Jesuist *குழுவைச் சார்ந்த ஒருவனால் கொலை செய்யப்பட்டான்.*

கத்தோலிக்க மதத்தின் ஒரு பிரிவான Jesuists இக்னேசியஸ் லொயோலா (Ignatius Loyola) என்ற ஸ்பெயினைச் சேர்ந்தவரால் நிறுவப்பட்டது. புரொட் டஸ்தாந்தியர்களை அதாவது சீர்திருத்தவாதிகளை முற்றாக ஒழிப்பதே அவர்களுடைய கொள்கையாக இருந்தது. அவர்கள் போப்புக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்களாக இருந்தனர். எந்தவித நிபந்தனைகளுமில்லாமல் போப்பின் அதிகாரத்துக்கு மட்டுமே அவர்கள் கட்டுப்பட்டனர். அவர்கள் தங்களை “இயேசுவின் சமுதாயம்” (The Society of Jesus) என்று அறிவித்துக் கொண்டனர். தங்களுடைய பிரிவின் கட்டளைகளைத் தவிர வேறு எதற்கும், தங்களுடைய சொந்த மனச்சாட்சிக்கும்கூட அவர்கள் கட்டுப்படவில்லை. அவர்கள் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல கல்வியளிப்பதைத் தங்களுடைய பணியாகக் கொண்டனர். இதனால் அவர்களுடைய செல்வாக்கு சமுதாயத்தில் அதிகமாக இருந்தது. ‘தங்களுடைய இலக்கை அடைவதற்காக எதையும் செய்யலாம்’ என்ற பயங்கரமான கொள்கையை அவர்கள் கடைப்பிடித்தார்கள். அதாவது கத்தோலிக்க மதத்துக்கு நன்மை வரும் என்று கருதினால் அவர்கள் கொலை செய்யவும் தயங்கவில்லை. பிரான்ஸின் அரசனான நான்காம் ஹென்றியைக் கொலை செய்த ரேவிலெக் (Ravaillac) இந்தப் பிரிவின் கையாளாக இருந்தான்.

1598க்குப் பிறகு கத்தோலிக்கர்கள் ஹியூகனோக்களுக்கு சார்பாக இருந்த நென்டஸ் கட்டளையை அகற்றத் தீவிரமாகப் போராடினர். பதினேழாம் நூற்றாண்டு முழுவதும் இதைச் செய்வதையே அவர்கள் கடமையாகக் கருதி உழைத்தனர். இறுதியில் 1629ல் ஹியூகனோக்கள் அப்போது புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையின்படி கத்தோலிக்க அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு வாழ உடன்பட்டனர். இதன் மூலம் அவர் களுடைய அரசியல் செல்வாக்கு இல்லாமல் போனது. அரசியல் செல்வாக்கை இழந்தாலும் அவர்கள் தங்களுடைய மத சுதந்திரத்தைக் காப்பாற்றி அரசனுக்கு விசுவாசமுள்ளவர்களாக வாழ்ந்து வந்தனர். ஹியூகனோக்கள் அறிவில் சிறந்தவர்களாக இருந்ததோடு, கடுமையாக விசுவாசத்தோடு உழைப்பவர்கள் என்ற பெயரையும் அக்காலத்தில் பெற்றிருந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து நிலைமை ஹியூக னோக்களுக்கு எதிராக மாற ஆரம்பித்தது. 1658ல் நென்டஸ் கட்டளை முற் றாக அகற்றப்பட்டது. சகல புரொட்டஸ்தாந்து திருச்சபைகளையும் தகர்த் தெறிய கட்டளையிடப்பட்டது. ஹியூகனோக்களின் குழந்தைகள் அனை வரும் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும்படிச் செய்யும் முயற்சிகள் ஆரம்பித்தன. அப்போது அரசனாக இருந்த பதினான்காம் லூயிஸ் ஹியூக னோக்கள் நாட்டைவிட்டு வெறியேறுவதைத் தடைசெய்யப் பல முயற்சி களை எடுத்தபோதும் ஆயிரக்கணக்கானோர் நாட்டைவிட்டு வெளியேறித் தப்பினார்கள். வாரத்திற்கு மூவாயிரம் பேராக ஆயிரக்கணக்கானோர் சுவிட்சர்லாந்தைச் சென்றடைந்தனர். இக்காலத்தில் 300,000 ஹியூகனோக்கள் பிரான்ஸில் இருந்து வெளியேறினார்கள். தன்னுடைய முட்டாள் தனத்தினாலும், மதத்தின் பெயராலும் நாட்டை நாசப்படுத்தினான் லூயிஸ்.

***கேள்வி 103***: *முறையாக திருமுழுக்கு எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும்?*

***பதில்***: *கிறிஸ்து ஏற்படுத்தித் தந்துள்ள முறையின்படியும், அப்போஸ்தலர்களுடைய நடைமுறையின்படியும், பிதா, குமாரன், ஆவியானவரின் நாமத்திலே விசுவாசியின் சரீரம் முழுவதையும் தண்ணீரிலே அமுத்தி திருமுழுக்கு கொடுக்க வேண்டும். தண்ணீரை விசுவாசியின் மீது தெளிப்பதன் மூலமாகவோ, அவர்களுடைய சரீரத்தின் ஒரு பகுதியை மட்டும் தண்ணீரில் அமுத்துவதன் மூலமாகவோ திருமுழுக்கு கொடுக்கப்படக்கூடாது.*

*(மத்தேயு 3:16; யோவான் 3:23; அப்போஸ்தலர் 8:38-39).*

**திருமுழுக்கு கொடுக்க வேண்டிய சரியான முறை**

திருமுழுக்கைக் குறிக்கப் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு (Baptidzo) 'தண்ணீரில் அமுத்துதல் அல்லது தாழ்த்துதல்' (dip, immerse, submerge) என்பதே பொருள். இந்த முறையிலேயே இந்த வார்த்தைக்கு கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் சமுதாயத்தில் அர்த்தம் கொண்டிருந்தார்கள். திருமுழுக்கு என்றால் அதற்கு தண்ணீரில் தாழ்த்துதல் என்று மட்டுமே பொருள்; வேறு பொருள் கிடையாது.

அதுமட்டுமல்லாமல் திருமுழுக்கு எதை விளக்கப் பயன்படுத்தப்படுகிறதோ அதோடும் நடைமுறையில் ஒத்துப்போவதாக இருக்கிறது. ஒருவருடைய பாவம் கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் கழுவப்படுகிறதை திருமுழுக்கு குறிக்கிறது (அப்போஸ். 22:16). அவ்வாறாக பாவம் முழுவதுமாக கழுவியெடுக்கப்படுவதை தண்ணீரில் முழுவதுமாக விசுவாசியின் சரீரத்தை தாழ்த்தும் முறையாலேயே விளக்க முடியும். தண்ணீரை ஒருவர் மேல் தெளித்து இதை விளக்க முடியாது. அத்தோடு திருமுழுக்கு நாம் கிறிஸ்துவோடு பாவத்திற்கு மரித்து புதிய ஜீவனோடு உயிர்த்தெழுவதையும் விளக்குகிறது. இதை வெறும் தெளிப்பு ஞானஸ்நானத்தால் விளக்க முடியாது. இவ்வாறாக கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலம் பங்குகொண்டு அவரோடு நாம் ஆத்மீக ரீதியாக இணைக்கப்படுவதை பவுல் ரோமர் 6:3-5 வரையிலான வசனங்களில் விளக்குகிறார். கிறிஸ்துவுக்குள் நாமடைந்துள்ள இத்தகைய ஆத்மீக அனுபவங்களையே திருமுழுக்கு விளக்குகிறது. அதை விசுவாசியைத் தண்ணீருக்குள் தாழ்த்துவதைத் தவிர்த்த வேறு முறைகளால் விளக்க முயல்வது திருமுழுக்கின் அர்த்தத்தையே மாற்றிவிடும். திருமுழுக்கு நமக்கு விசுவாசத்தைக் கொடுக்கும் திருநியமம் அல்ல; அது நம்முடைய இரட்சிப்பின் அநுபவத்தை விளக்கும் திருநியமம். ஆகவே, அதை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. திருமுழுக்கு அளிக்கப்படவேண்டிய முறை எப்படியும் இருக்கலாம் என்று அலட்சியமாக இருந்துவிட முடியாது. அதைக் கொடுக்

கும் முறை வேதத்தோடு முழுவதும் பொருந்திவருவதாக இருக்க வேண்டும். தண்ணீரில் விசுவாசியைத் தாழ்த்துவதனால் மட்டுமே அதை நாம் முறையாக செய்ய முடியும்.

இயேசு கிறிஸ்து நமக்கு உதாரணமாக இருக்க திருமுழுக்கு பெற்றுக் கொண்டபோது தண்ணீருக்குள் இறங்கி அதற்குள் இருந்து வெளியில் தந்தார் (மத்தேயு 3:16). தண்ணீர் தெளிப்பது மட்டும் அவசியமாக இருந்திருந்தால் இயேசு கிறிஸ்து இப்படி நமக்கு உதாரணமாக இருக்கும்படியாக தண்ணீருக்குள் போய் வெளியில் வந்து திருமுழுக்கு பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த முறையிலேயே யோவான் ஸ்நானனும் திருமுழுக்களித்திருக்கிறார்.

ஆகவே, விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது அவர்களுடைய சரீரம் முழுவதும் தண்ணீருக்குள் தாழ்த்தப்பட வேண்டியது அவசியம். தண்ணீரை அவர்கள் மேல் தெளிப்பதோ, அல்லது சரீரத்தின் ஒரு பகுதியை மட்டும் தண்ணீரில் தாழ்த்துவதோ சரியான முறையாகாது. ஞானஸ்நானம் கொடுப்பது மட்டுமே முக்கியமானது, அதை எப்படிக் கொடுத்தாலும் பரவாயில்லை. ஏனென்றால், அதுபற்றி வேதம் தெளிவாக விளக்கவில்லை என்ற அசட்டு வாதங்கள் எடுபடாது. வேதம் மிகத் தெளிவாகவே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டிய முறையை யோவான் ஸ்நானன் மூலமும், இயேசு கிறிஸ்துவின் உதாரணத்தின் மூலமும், அப்போஸ்தலர்களின் போதனைகளின் மூலமும் வெளிப்படுத்துகிறது.

### இயேசு கிறிஸ்து ஏன் திருமுழுக்கு பெற்றார்?

புதிய உடன்படிக்கையின்படி கிறிஸ்தவ திருச்சபை திருச்சபைக்குரிய பணிகளைக் கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் போதித்தும், உதாரணமாகவும் தந்துள்ள நடைமுறைகளின்படி நடத்தி வரவேண்டும். அதன்படி திருச்சபையில் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய திருமுழுக்கு கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்றிக் கொடுக்கப்பட வேண்டும். மத்தேயு 3:16 இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியப்பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார் என்பதை விளக்குகிறது. திரித்துவ தேவனில் இரண்டாம் அங்கத்தவரான இயேசு கிறிஸ்து திருமுழுக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவர் நம்மைப் போல பாவத்தில் இருந்து மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டிய அவசியமும் இல்லை. வேதம் அவரில் பாவம் இல்லை என்பதைத் தெளிவாக நமக்கு விளக்குகிறது. அப்படியானால் கிறிஸ்து திருமுழுக்கு பெற்றுக்கொண்டதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்வது அவசியம். இயேசு தனக்குத் திருமுழுக்குக் கொடுக்கும்படிக் கேட்டவுடன் யோவான் ஸ்நானன் திகைத்துப் போனார் (யோவான் 1:29). இருந்தபோதும் இயேசு யோவான் ஸ்நானனை வற்புறுத்தி திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டார். தன்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே இவ்வாறாக திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதன் மூலம் புதிய உடன்படிக்கை காலத்தில் திருமுழுக்கின் முக்கியத்துவத்தை கிறிஸ்து நமக்கு உணர்த்துகிறார். இரட்சிக்கப்பட்ட மக்களோடு தமக்கிருக்கும் தொடர்பையும், தம்மை அவர்களோடு இணைத்

*துக் கொள்ளப்போவதையும் உணர்த்துவதற்காகக் கிறிஸ்து தானே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். தன்னுடைய மரணத்தினாலும், உயிர்த்தெழுதலின் மூலமாகவும் பெறப்பட்ட நீதியை நமக்குத் தரப் போவதை உணர்த்துவதற்காக அவர் ஞானஸ்நானம் பெற்றார் (2 கொரி. 5:21). அவருடைய சரீரத்தின் அங்கத்தவராகிறவர்களும் இயேசு கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்றி மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் அவரோடு தங்களுக்கிருக்கும் ஐக்கியத்தை உணர்த்துமுகமாக ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

## அப்போஸ்தலர்களின் நடைமுறை

*இயேசு கிறிஸ்துவின் போதனையையும், உதாரணத்தைப் பின்பற்றி அவருடைய அப்போஸ்தலர்களும் விசுவாசிகளுக்கு மட்டும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். எத்தியோப்பிய மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானத்தை இந்த முறையிலேயே கொடுத்திருக்கிறார். "அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது . . ."* என்று *எழுதியிருப்பதை அப்போஸ். 8:38, 39ல் வாசிக்கிறோம். இந்த வசனங்கள் அங்கே ஞானஸ்நானம் எந்த முறையில் கொடுக்கப்பட்டது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. இந்தப் பகுதியை வைத்து தெளிப்பு ஞானஸ்நானத்தை எவரும் வலியுறுத்த முடியாது. இந்த முறையிலேயே ஆதி சபைக் காலத்தில் மனந்திரும்பி இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட அனைவரும் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.*

## திரித்துவ தேவனின் பெயரில் ஏன் திருமுழுக்கு அளிக்கப்பட வேண்டும்?

*இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரோடு இணைக்கப்பட்டு ஐக்கியத்தில் வந்திருப்பதை ஞானஸ்நானம் குறிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்டிருப்பதை அது குறிக்கிறது. ஆனால், விசுவாசிகள் கிறிஸ்துவோடு மட்டும் ஞானஸ்நானத்தினால் இணைக்கப்படவில்லை, திரித்துவ தேவனின் ஏனைய அங்கத்தவர்களான பிதாவோடும், ஆவியானவரோடும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவோடு மட்டும் ஐக்கியத்தில் வருவதில்லை; பிதாவோடும், ஆவியானவரோடும் ஐக்கியத்தில் வருகிறார்கள். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது பிதாவும், ஆவியானவரும் அன்றைய தினம் அவருக்குச் சாட்சி சொன்னார்கள் என்று வேதம் சொல்லுகிறது. இது கர்த்தர் திரித்துவ தேவனாக இருப்பதை நமக்கு உணர்த்துகிறது. பிதா, குமாரன், ஆவியானவராகிய மூவரும் மீட்பை நமக்குப் பெற்றுத்தரும் பணியில் பங்கேற்பதோடு, விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை நமக்கு வழங்குவதிலும் அக்கறையோடு செயல்படுகிறார்கள். இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டிருக்கிற நாம் திரித்துவ தேவனோடு, அதாவது பிதா, குமாரன், ஆவியானவரோடு ஐக்கியத்தில் வருகிறோம். இதைத்தான் மத்தேயு 28ல் காணப்படும் கட்டளையின் மூலம் இயேசு நமக்கு சொல்லாமல் உணர்த்துகிறார். இயேசுவின் பெயரில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறவர்கள் வேதபோதனைகளை தெளிவாக அறிந்துகொள்ளவில்லை.*

*"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு
எச்சரிக்கையாக இருங்கள்; ஏனெனில் அநேகர்
வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு:
நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை
வஞ்சிப்பார்கள். . . .'*

*'இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். .'*

*'அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி,
அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரம்
மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு
தணிந்துபோம். . . .'*

*'அப்பொழுது இதோ, கிறிஸ்து
இங்கேயிருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார்
என்று எவனாகிலும் சொன்னால்
நம்பாதேயுங்கள். ஏனெனில் கள்ளக்
கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும்
எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்
பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய
அடையாளங்களையும் அற்புதங்களையும்
செய்வார்கள். இதோ முன்னதாகவே
உங்களுக்கு அறிவிக்கிறேன். ஆகையால், அதோ,
வனாந்தரத்திலே இருக்கிறார் என்று
சொல்வார்களானால் புறப்படாதிருங்கள்;
இதோ அறை வீட்டிற்குள் இருக்கிறார் என்று
சொல்வார்களானால் நம்பாதிருங்கள்." -
(மத்தேயு 24:4-26)*

இயேசு கிறிஸ்துவின் இந்தப் பொன்னான வார்த்தைகளை நினைவுகூற வேண்டிய காலமிது. தெய்வீகத்தைத் தமக்குள் சுமந்துகொண்டிருப்பதுபோல் பாசாங்கு செய்து நம்மை ஏமாற்ற முனையும் அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் இன்று நம்மத்தியில் கிறிஸ்துவின் பெயரில் நடமாடி வருகிறார்கள். அற்புதங்கள் செய்வதுபோல் நாடகமாடிக் கூட்டங்களை நடத்தி கிறிஸ்துபோல் உலவி வரும் இவர்களின் பாசாங்கிற்கு மயங்கிவிடாமல் சத்திய வேதத்தைக் கவனமாகப் படித்து ஒவ்வொருவரின் ஆவியையும் ஆராய்ந்து பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள். சாத்தானின் வஞ்சகத்திற்கு உங்களைப் பலி கொடுத்துவிடாதீர்கள்.

# நான் ஏன் ரோமன் கத்தோலிக்கன் இல்லை!

*சார்ள்ஸ் பி லெபேபிரா* (Chrales B LeFevre)

*நான் ஏன் "புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ பிரிவைச் சேர்ந்தவன் அல்ல" என்ற தலைப்பில் அதற்கான காரணங்களைக்காட்டி ரோமன் கத்தோலிக்க மதம் ஒரு கைப்பிரதியை வெளியிட்டதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதைப் பற்றி அநேகர் செய்தித் தாளில் படித்து இதற்கான பதில் தரும்படி என்னிடம் கேட்டார்கள். அக்கைப்பிரதியில் ரோமன் கத்தோலிக்க மதம் வெளியிட்டுள்ள கருத்துக் களைப் பார்க்கும்போது எனக்கு பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள் மத்தியில் இருந்த மொழிக் குழப்பமே நினைவுக்கு வருகின்றது. இவர்கள் உண்மையைச் சோற்றில் மூடி மறைத்து, அறைகுறையான பல காரணங் களைக் காட்டி, வேதத்திற்கு தவறான விளக்கங்களையும் தந்திருக்கிறார்கள். மேலும் இவர்களுடைய ஏமாற்று வேலைகளையும், தவறுகளையும், புரட்டுக்களையும் நிரூபிப்பதானால் நான் ஒரு பெரிய நூலையே எழுத நேரிடும். எனவே, அநேகருடைய வேண்டுகோளை ஏற்று, "நான் ஏன் ரோமன் கத்தோலிக்கன் இல்லை?" என்பதற்கான இருபதுக்கும் மேற்பட்ட காரணங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.*

*(1) பாவத்திலிருந்து என்னை மீட்டு இரட்சித்தவரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு நான் சொந்தமானவனானபடியாலும், அவருக்கே முழுமையாகக் கீழ்ப்படிவதாலும் அவர் தலையாக இருந்து வழிநடத்தும் அவருடைய திருச்சபையை மட்டுமே சார்ந்தவன் நான். ரோமன் கத்தோலிக்க மதத்தோடும், அதன் தலைமையோடும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இயேசு சொன்னார்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). இவ்விதமாக கிறிஸ்துவுக்குள்ளாக பிதாவினிடத் தில் சேரும் பாக்கியத்தையும், இன்றியமையாத சத்தியத்தையும், நித்திய வாழ்வையும் நான் அடைந்திருக்கிறேன்.*

*(2) கிறிஸ்து தான் கட்டுகிறேன் என்று சொன்ன திருச்சபை, ரோமில் உள்ள கத்தோலிக்க சபையை அல்ல! (மத்தேயு 16:18). பெந்தகொஸ்தே நாளில், சுவிசேஷ அறிவிப்பின் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமும் எருசலேமிலேயே தன்னுடைய பரிசுத்தமான திருச்சபையை கிறிஸ்து ஏற்படுத்தினார். அது இத்தாலிய நாட்டு ரோம் நகரில் நிறுவப்படவில்லை. எருசலேமில் திருச்சபை நிறுவப்பட்ட அந்தக்*

காலத்தில் ரோம் நகர் புறஜாதியாரையும் விக்கிரக வழிபாடு செய்பவர் களையுமே கொண்டிருந்தது. அங்கே ஒரு கிறிஸ்தவனாவது இருக்கவில்லை.

(3) அடுத்ததாக, இயேசு கிறிஸ்துவின் மெய்யான ஒரே திருச்சபை ரோமன் கத்தோலிக்க சபை அல்ல. கிறிஸ்து தலைமை வகிக்கும் திருச்சபையைப் பற்றிய ஒரு முக்கிய உண்மை, அது ஆவிக்குரிய நிலையிலும், ஜீவனுள்ள தாகவும் வியாபித்துக் காணப்படுவதாகும். அதாவது கிறிஸ்துவில் ஜீவனை அடைந்திருக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட விசுவாசிகளைக் கொண்ட அவருடைய திருச்சபை உயிர்த்துடிப்போடு பரந்து வியாபித்து காணப்படு கின்றது. ஆனால், புறக்கண்களால் மட்டுமே நாம் பார்க்க முடிகிற ரோம் நகரில் இருக்கும் ரோம சபை மனிதர்களால் கட்டப்பட்டதாக போப்பைத் தலைவனாகக் கொண்டு ஆவிக்குரிய நிலையில் இல்லாமல் இயங்கி வரு கிறது. இங்கே நாம் இரண்டு தலைமைகளைப் பற்றி விளக்கமளித்துக் கொண்டு வருவதிலிருந்தே சரீரத்துக்கு ஒரே சமயத்தில் ஒரு தலை மட்டுந் தான் இருக்க முடியும் என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்து தன்னுடைய திருச்சபைக்குத் தலையாக இருக்கும்போது போப்பை அத் திருச்சபையின் இன்னொரு தலையாக நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

(4) பேதுருவை அடிக்கல்லாகக் கொண்டு நிறுவப்பட்டதாகத் தன்னை இனங்காட்டிக் கொள்கிறது ரோமன் கத்தோலிக்க சபை. ஆனால், கிறிஸ்து தமது சபையை அசையக்கூடிய கல்லின் மேல் (‘Petros’ or ‘Peter’) கட்டு வேன் என்று ஒருபோதும் சொல்லவில்லை. இயேசு தன்னுடைய சபையை என்றென்றும் ஜீவிக்கிற, உறுதியான, அசையாத கல்லின்மேல் (Petra) கட்டுவேன் என்றார். ‘Petra’ என்ற வார்த்தை அசையாத, ஜீவிக்கின்ற என்ற பொருளைக் கொண்டிருக்கிறது. பேதுருவும் மற்ற அப்போஸ் தலர்களும் தெய்வீக கிறிஸ்துவை என்றென்றும் ஜீவிக்கிற பாறை என்றும், திருச்சபைக்கு அவரே அஸ்திபாரம் என்றும் கூறியுள்ளார்கள். அப்போஸ் தலனாகிய பவுல் சொல்கிறார், “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனா லும் கூடாது.” (1 கொரி. 3:11) எபேசியர் 2:20ன்படி கிறிஸ்துவே அப்போஸ் தலர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் அஸ்திபாரமாக இருக்கிறார். கிறிஸ்து வாகிய அஸ்திபாரம் இல்லாமல் மெய்யான திருச்சபை இருக்க முடியாது.

(5) ரோம சபை தன்னை உலகளாவிய திருச்சபையென்று பெருமையுடன் அறிவித்துக்கொண்டாலும் உண்மையில் அது மெய்யான உலகளாவிய திருச்சபை அல்ல. கத்தோலிக்கம் (Catholic) என்ற வார்த்தைக்கு “உலக ளாவிய அளவில்” (Universal) என்பது பொருள். எனவே உலகளாவிய கிறிஸ்தவ சபையானது, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அடங்கியுள்ள சகல விசுவாசிகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். இதுவரை வாழ்ந்து மரித்துள்ள இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் ரோம சபையை அறியாம லேயே வாழ்ந்திருக்கிறார்கள். அதேபோல் வாழ்ந்து கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களும் ரோம சபையை அறியாமல் இருந்து வருகிறார்கள். ‘கத்தோலிக்கம்’ மற்றும் ‘உலகளாவிய’ என்ற வார்த்தைகளின் அர்த்தத்தின்படி மெய்யான உலகளாவிய திருச்சபையாக இருப்பதானால்

*அத்திருச்சபை ஆவிக்குரியதாக தெரிந்து கொள்ளப்பட்ட ஆத்துமாக்கள் அனைவரையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் ஆத்மீக சரீரமாக இருக்க வேண்டும். ஆனால், ரோம சபையில் அதன் அதிகாரத்துக்குட்பட்டவர்கள் மட்டுமே அதன் ஐக்கியத்திற்குள் இருப்பவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, ரோம சபை உலகளாவிய சபை இல்லை.*

*(6) தன் சபையைச் சார்ந்தவர்களுடைய விசுவாசத்தின் மேலும், அவர்களுடைய நடைமுறை வாழ்க்கை மீதும் தனக்கு சர்வ அதிகாரம் இருப்பதாக ரோம சபை சொல்கிறது. இப்படி அப்போஸ்தலர்கள் கூட ஒருபோதும் சொன்னதில்லை. அப்போஸ்தலரொருவர் இன்னொரு அப்போஸ்தலர் மீது விசேஷ அதிகாரம் செலுத்தும்படி கிறிஸ்து எவருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை (மத்தேயு 18:18; மாற்கு 9:33-35). அவர்கள் மேலான அதிகாரத்தையும், இடத்தையும் நாடியபோது இயேசு அவர் களுடைய ஆணவத்தையும், சுயநலத்தையும் கடிந்துகொண்டார் (மத்தேயு 20:20-27). கிறிஸ்து சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட தினம் வரையும் தங்களுக்குள் யார் பெரியவன் என்பதில் அவருடைய சீஷர்களுக் கிடையில் வாக்குவாதம் நடந்தது (லூக்கா 22:24-26).*

*பேதுரு கோழைத்தனமாக மூன்று முறை கிறிஸ்துவை மறுதலித்திருந்தும், அவரைத் தெரியாது என்று சத்தியம் செய்திருந்தும், மற்ற அப்போஸ்தலர் களைவிட அதிக அதிகாரத்தை கிறிஸ்து பேதுருவுக்குக் கொடுத்தார் என்று ரோம சபை நம்மை நம்பச் சொல்லுகிறது. ஆனால், மனந்திரும்பும்படி பேதுருவுக்கு இயேசு ஆலோசனைகள் வழங்கியபோது, ஒரு போதகர் தன்னுடைய சபை மக்களுக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும் படி மட்டுமே அறிவுரை செய்தார். அதுமட்டுமல்லாது கிறிஸ்து தனிப்பட்ட முறையில் தன்னுடைய அப்போஸ்தர்களில் ஒருவருக்கு கொடுத்த எந்த அதிகாரத்தையும் அந்த அப்போஸ்தலன் வேறு எவருக்கும் கொடுக்க முடியாது. அது அந்த அப்போஸ்தலனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. நம்முடைய சொத்துக்களை நாம் நம்மைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப் பதைப்போல நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும், சிறப்பான ஆத்மீக வரங்களையும் மற்றவர்களுக்கு தானம் பண்ண முடியாது. எனவே, பேதுருவின் வழியில் வந்ததாகக் கூறிக்கொண்டு எந்த மனிதனும் நிரந்தர மான தெய்வீக அதிகாரத்தை எவர் மீதும் செலுத்த முடியாது. கிறிஸ்து மட்டுமே அவருடைய திருச்சபையின் தலைவனாக இருக்கிறார். அந்தத் தலைவன் கட்டளையிடும்போது கப்பல் மாலுமிகள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்களே தவிர கட்டளை யிடும்படியாக அல்ல.*

*மேலும், ஏனைய அப்போஸ்தலர்கள்மீது பேதுரு எந்தவிதத்திலும் தனது ஆதிக்கத்தையோ, அதிகாரத்தையோ செலுத்தவில்லை. மாறாக, அவர் களிடத்தில் அவர் அனுப்பப்பட்டார் என்றுதான் வேதத்தில் வாசிக் கிறோம் (அப்போஸ்தலர் 8:14). அத்தோடு, எருசலேமில் சபைத் தலைவர் களின் முதல் சபைக்கூட்டம் நடந்தபோது, அதில் யாக்கோபு தீர்ப்பை அளித்தாரே தவிர பேதுரு அதைச் செய்யவில்லை (அப்போஸ்தலர் 15:13,*

20). பேதுரு உண்மையான சுவிசேஷத்தின்படி நடக்காததைக் கவனித்த போது, பவுல் அப்போஸ்தலன் அவரைக் குற்றவாளியாகக் கண்டு எல்லோருக்கும் முன்பாகவும் குற்றவாளி என்று முகத்தைப் பார்த்துக் கடிந்துகொண்டார். (கலாத்தியர் 2:11-14). பேதுரு திருச்சபை மூப்பர்களுக்குக் கொடுத்த அறிவுறையில் தன்னைக் குறித்துக் கூறும்போது “உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும்” என்று தன்னை அவர்களுக்கு இணையாகப் பாவித்து எந்தவித அதிகாரத் தொனியும் இல்லாமல் “உங்களிடத்திலுள்ள மந்தையை மேய்த்து சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்” என்று அறிவுரை கூறினார் (1 பேதுரு 5:1-3).

கிறிஸ்து பவுலை அதிகாரபூர்வமான அப்போஸ்தலனாக நியமித்தபோது பேதுருவின் சம்மதத்தைக் கேட்காமலேயே நியமித்தார். அதேபோல, இன்றைக்கும் ஆயிரக்கணக்கான போதகர்களையும், சுவிசேஷகர்களையும் ரோமின் போப்பின் ஆலோசனையைக் கேட்காமலேயே கிறிஸ்து தொடர்ந்து நியமித்து வருகிறார்.

(7) ரோம சபையானது அப்போஸ்தல சபை அல்ல. ஐந்தாம் நூற்றாண்டு களில் இருந்து ரோம சபை பலவழிகளில் அப்போஸ்தலர்களின் உபதேசத் திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பிரிந்துபோனது. ஞானஸ்நானத்தை குறித்தும், திருவிருந்தைக் குறித்தும் வித்தியாசமான வழிகளை அது பின்பற்ற ஆரம்பித்தது. இதைப்போன்று இன்னும் அநேக காரியங்களில் அது அப்போஸ்தலப் போதனைகளைவிட்டு விலகித் தன்வழியில் போக ஆரம்பித்தது. அத்தோடு, தானே தீர்மானித்த புதிய போதனைகளையும், சடங்குகளையும், ஆடம்பரமான பகட்டாரவாரங்களையும் சபையோடு இணைத்துக் கொண்டது. இவற்றையெல்லாம் கர்த்தருடைய அப்போஸ் தலர்கள் ஒருபோதும் போதித்ததுமில்லை, நடைமுறைப்படுத்தியதுமில்லை. அப்போஸ்தலர்களின் உபதேசத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டு நடப்பதை விட்டுவிட்டு பல நூற்றாண்டுகளாகத் தானே உருவாக்கிக்கொண்ட பாரம்பரியங்களைப் பின்பற்றி ரோம சபை நடந்து வருகின்றது.

(8) ரோம சபையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நிறுவவில்லை. முதல் நூற்றாண்டில் யூதேயா, சமாரியா, கலாத்தியா, மக்கெதோனியா மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் அநேக திருச்சபைகள் இருந்தன (அப்போஸ்தலர் 9:31, 1 கொரிந்தியர் 16:1, 2 கொரிந்தியர் 8:1, வெளிப்படுத்தல் 1:4, 11). இந்தச் சபைகளெல்லாம் அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்ட அப்போஸ்தலத் திருச்சபைகளாக இருந்தன. அத்தோடு இவைகளெல்லாம் ரோம சபை நிறுவப்படுவதற்கு முன்பே உருவான சபைகளாக இருந்தன. இங்கே விசேஷமாக நாம் கவனிக்க வேண்டிய அம்சமென்னவெனில், எந்தவொரு திருச்சபையும் தன்னை மட்டுமே மெய்யான உலகளாவிய திருச்சபையாகக் கருத முடியாது என்பதுதான். அந்தப் பெருந்தவறைத்தான் போப்பின் ரோம சபை இன்றும் செய்து வருகிறது.

(9) அடுத்தபடியாக, நாம் கண்களால் காணக்கூடியதாக உலகத்தில் நிறுவப் பட்டிருக்கும் ஜீவனுள்ள உள்ளூர் திருச்சபைக்கும் (Visible local church)

*அதன் இன்னொரு பக்கமான கண்களால் காணமுடியாத ஆவிக்குரிய நிலையில் இருக்கும் உலகளாவிய ஜீவனுள்ள திருச்சபைக்குமிடையில்* (Invisible Universal church) *உள்ள வித்தியாசத்தை ரோம சபை சரிவர அறிந்துகொள்ளவில்லை. கண்களால் காணக்கூடியதாக உலகின் பல பாகங்களில் உள்ளூர் சபைகள் ஒன்றுக்கு மேற்பட்டதாக* (Plural) *இருக்கின்றன. ஆனால், ஆத்மீக ரீதியில் இருக்கும் உலகளாவிய திருச்சபையை நாம் கிறிஸ்துவின் சரீரமாகவும், கிறிஸ்துவின் மணவாட்டியாகவும்தான் பார்க்கிறோமே தவிர கிறிஸ்துவின் 'சரீரங்களாகவும்', 'மணவாட்டிகளாகவும்' பார்ப்பதில்லை. உலகளாவிய* (Universal Invisible) *திருச்சபையை 'ஒன்றுக்கு மேற்பட்டதாக' நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. அது எப்போதும் ஒரே திருச்சபையாக கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது (1 கொரி. 12:27; கொலோ. 1:18). இந்த வேத போதனைகளின் அடிப்படையில் பார்க்கிறபோது உலகத்தில் கண்களால் காணக்கூடியதாக இருக்கும்*


## திருமறைத்தீபம் பத்திரிகையின் ஆசிரியர்

## போதகர் ஆர். பாலாவின்

# - அருளுரைகள் -

**இப்போது ஒலி, ஒளி நாடாக்களில் (Audio, VCD) கிடைக்கும். மேலும் அநேக பயனுள்ள செய்திகளுக்கும் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:**

**இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை**
***57 / 2 டீ. பி. கே. மெயின் வீதி***
***பைகாரா***
***மதுரை 625004***
***தொலைபேசி எண்: 0452 6505810***

*போப்பின் ரோம சபை போப் சொல்லுவது போல் கிறிஸ்துவால் நிறுவப் பட்ட உலகளாவிய திருச்சபையாக, அவருடைய மெய்யான ஒரே ஆத்மீக சபையாக ஒருபோதும் இருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது.*

*(10) போப் மட்டுமே கிறிஸ்துவின் திருச்சபைக்கு ஒரே தலைவராக இருக்கிறார் என்று ரோம சபை கூறுவது முழுத்தவறு. வாக்குத்தத்தத்தின் மூலம் தன்னுடைய மக்களுக்கு ஒரு நாட்டைக் கர்த்தர் அளித்தபோது அதற்குத் தலைவனாக, அரசனாக கர்த்தர் ஒருவரையும் நியமிக்கவில்லை (நியாயாதி 17:6; 18:1). ஏனெனில், அவரே தன்னுடைய மக்களுக்கு இராஜா வாக இருந்ததினால் தம் சித்தப்படி அநேக நியாயாதிபதிகளை மட்டும் அவர்களுக்குத் தந்தார் (1 சாமு. 8:5-7). இதேபோல, தான் தலைவனாக, இராஜாவாக இருக்கும் தன்னுடைய ஒரே ஆத்மீகத் திருச்சபைக்கு அவர் எந்த மனிதனையும் போப்பாகவோ, தலைவனாகவோ நியமிக்கவில்லை (எபேசியர் 1:22, 23; கொலோ. 1:18). இஸ்ரவேலர்கள் கர்த்தரின் சித்தத்திற்கு எதிராக எப்படித் தங்களுடைய நாட்டுக்கு ஒரு மனிதனை இராஜாவாக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்களோ அதேபோல ரோம சபையும் கர்த்தரின் வேத போதனைகளுக்கெல்லாம் முரணாக, தனக்கு ஒரு மனிதனைத் தலைவனாக, போப்பாக நியமித்து, அவருக்கு மிகச் சிறந்த பரிசுத்த தலைவன் என்ற பட்டத்தை அளித்து உலகளாவிய கிறிஸ்து வின் திருச்சபைக்கு அவரே ஒரே தலைவன் என்று பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறது.*

*(11) கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரை நாடி, அவருடைய வழிநடத்து தலின்படி நடக்க வேண்டும் என்பதை ரோம சபை அங்கீகரிக்கவில்லை; அதை அனுமதிப்பதுமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14). ஆனால், ரோம சபையானது விசுவாசத்திற்குரிய அனைத்து காரியங்களிலும் போப்பின் வழிநடத்துதலை மட்டுமே கண்மூடித்தனமாகப் பின்பற்றவேண்டும் என்று ஒவ்வொருவரையும் வற்புறுத்தி அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றது. இவ்விதமாக போப்பானவர், தன்னைப் பரிசுத்த ஆவியானவருக்கு சமமாகக் கருதி சகலத்தையும் அறிந்த தெய்வீக குணாதிசயத்தைத் தனக்குள் கொண்டிருப்பது போல் தோற்றமளித்து பாசாங்கு செய்கிறார்.*

*(12) கர்த்தரின் பரிசுத்த வேதத்தைப் பற்றி ரோம சபை கொண்டிருக்கும் மனப்பான்மை முற்றிலும் தவறானது. நாம் வாசிக்கின்ற வேதத்தை 'புரொட்டஸ்தாந்தியர்களின் வேதம்' என்று அறிவித்து அதை எவரும் வாசிப்பதை அது தொடர்ந்து தடை செய்கிறது. புரொட்டஸ்தாந்தியர்கள் வாசிக்கும் வேதம் ரோமன் கத்தோலிக்க வேதத்தைப் போன்றதல்ல. ரோமன் கத்தோலிக்க சபை தெய்வீக வழிநடத்துதலின்படிக் கொடுக்கப் படாதவற்றையும், அப்போஸ்தலர்களால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாத வற்றையும் வேதத்திற்கு சமமான அதிகாரமுள்ள நூல்களாக ஏற்று வேதத் தின் அதிகாரத்தைப் பாழாக்கி வைத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சத்தியத்திற்கு எதிரான அநேக குறிப்புகளையும் வேதமாக ஏற்று*

*சத்தியத்தை மாசுபடுத்தி வருகிறது.*

*(13) ஆவியானவர் அங்கீகரிக்காத அநேக தவறான போதனைகளை வேதத்தோடு இணைத்துக்கொண்டதாலும், அப்போஸ்தலத் திருச்சபை நடைமுறையில் பின்பற்றிய அனைத்து முறைகளுக்கும் எதிரானவைகளைப் பின்பற்றியதாலும் கிறிஸ்தவ திருச்சபையில் மாபெரும் பிளவுகளை ஏற்படுத்திய பெருங்கொடூரமான குற்றத்தை ரோம சபை செய்திருக்கிறது. நம்முடைய விசுவாசத்திற்கும் நடைமுறைக்குமான ஒரே வழிகாட்டி சத்திய வேதம் என்ற கோட்பாட்டிலிருந்து முற்றாக விலகியதாலும், மனிதனுடைய மனுஷத்தனமான போதனைகளையும், பாரம்பரியங்களையும் பின்பற்றிய தாலும் ரோம சபை கிறிஸ்தவ திருச்சபையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியிருப்பதால், முற்றாக மனந்திருந்தி மறுபடியும் வேத அதிகாரத்தை அது மனப்பூர்வமாக ஏற்று நடக்கின்றவரை இயேசு கிறிஸ்து ஜெபித்த கிறிஸ்தவ ஐக்கியத்தை நாம் அதோடு எந்தவகையிலும் அநுபவிக்க முடியாத நிலையை அது உருவாக்கியிருக்கிறது.*

*(14) வேதத்திலுள்ள அதிகாரபூர்வமாக நிலைநாட்டப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைக் காரியங்களையும் பல நூற்றாண்டுகளாக ரோம சபை மாற்றி அமைத்திருக்கின்றது. ஒரு சமயம் திருவிருந்தில் ரொட்டித் துண்டை மட்டும் கொடுப்பதை பல போப்புகள் கண்டித்துத் தடைசெய் தார்கள். ஆனால், 1415 ஆம் ஆண்டு முதல் அந்த நடைமுறை போப்பு களால் அங்கீகரிக்கப்பட்டு வழக்கத்தில் இருந்தது. அதற்குப் பிறகு பல நூற்றாண்டுகளாக அப்போஸ்தலர்களும் அறிந்திராத வேதத்திற்குப் புறம்பான பல போதனைகளையும், நடைமுறைகளையும் ரோம சபை வழக்கத்திற்குக் கொண்டுவந்துள்ளது. உதாரணமாக, நூறு வருடங்களுக்குள் அது மூன்று புதிய போதனைகளை உருவாக்கி வெளியிட்டது. 1854ல் இயேசு கிறிஸ்துவின் அன்னையாகிய மரியாளைக் கறையற்ற பாவமில்லாத தூய்மையான பெண்ணாக* (The immaculate conception of Virgin Mary) *அது அறிவித்தது. 1870ல் போப் தவறுகள் எதுவுமே செய்ய முடியாத தன்மையுள்ளவராக* (The Infallibility of the Pope) *அது அறிவித்தது. 1950ல் கன்னிமேரியின் விண்ணேற்பு நாளை* (The Assumption of Mary) *அது அறிவித்தது. ஆனால், கிறிஸ்தவ திருச்சபையோ அது நிறுவப்பட்ட முதல் நூற்றாண்டில் இருந்து இன்றுவரை வேதத்தின் அத்தனைப் போதனை களையும் எந்தவித மாற்றமுமில்லாமல் தொடர்ந்து விசுவாசித்துப் பின்பற்றி வருகிறது.*

*(15) ரோம சபையானது அதனுடைய அனைத்து சமய சடங்குகளையும், வேதத்திற்கு அது கொடுக்கும் வேறுபாடான விளக்கங்களையும் அவை கிறிஸ்தவ வேதத்தின் பொதுவான போதனைகளுக்கு அடிப்படையிலேயே முரணாகவும், நம்முடைய அறிவுபூர்வமான சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டதாகவும் இருந்தாலும் அனைவரும் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறதோடு அவசியமானால் கட்டாயத்தின் மூலமும் அதை நிறைவேற்றப் பார்க்கிறது. உதாரணத்திற்கு திருவிருந்து பற்றிய அதனுடைய போதனையான, அப்பமும், திராட்சரசமும் முழுவதும் இயேசுவின்*

*சரீரமாகவும், இரத்தமாகவும் மாறிவிடுகிறது* (Transubstantiation) *என்பதை எடுத்துக் கொள்ளுவோம். இது நிக்கோதேமு மறுபிறப்பிற்கு உலகப் பிரகாரமான விளக்கத்தைக் கொடுத்ததைப் போல சிரிப்பூட்டுகின்ற போதனையாக இருக்கின்றது (யோவான் 3:3-4). கிறிஸ்து மறுபடியும் திரும்பி வரும் வரைக்கும் அவர் நம்முடைய மத்தியஸ்தராகவும், பரிந்து பேசுகிற வராகவும் பிதாவின் வலது பாகத்தில் வீற்றிருக்கிறார் என்று வேதம் தெளிவாகக் கூறுகின்றது. ரோம சபையில் திருவிருந்தின்போது கொடுக்கப் படும் ரொட்டித் துண்டை ஆராதிக்கிறவர்கள் மனிதனால் செய்யப்பட்ட மாவைக் கடவுளாகக் கருதி வணங்குகிற காரியத்தைத்தான் செய்து வருகிறார்கள்.*

*(16) ரோம சபையானது சுத்த மனச்சாட்சியின்படி சுதந்திரத்தோடு தேவனை ஆராதிக்க எவரையும் அனுமதிப்பதில்லை. தனக்கு வல்லமை இருக்கும் இடங்களிலெல்லாம், நாட்டு அதிகாரங்களைக்கூடப் பயன்படுத்தி தன்னு டைய அதிகாரத்திற்கு எல்லோரையும் கட்டுப்படுத்த அது முயல்கிறது. பிறருடைய உரிமைகளுக்குப் பங்கமேற்படாத வகையில் எல்லோரும் தங்களுடைய மனச்சாட்சிக்கு ஏற்ப ஆராதனையில் ஈடுபட கர்த்தர் முழு சுதந்திரத்தையும் வழங்கியிருக்கிறார். ஒவ்வொருவரும் தங்களுடைய வேதப் புத்தகத்தைத் தாங்களே வாசிக்கவும், ஆராய்ந்து படிக்கவும் கர்த்தர் அறிவுறுத்துவதோடு அவ்வாறு வேதப்படிப்பிலும், தியானத்திலும் ஈடுபடுபவர்களை ஆசீர்வதிப்பேன் என்றும் வேதத்தில் சொல்லியிருக்கிறார் (யோவான் 5:39, அப்போஸ்தலர் 17:11, வெளிப்படுத்தல் 1:3).*

*(17) போப் மட்டுமே இந்த உலகத்தில் "கிறிஸ்துவின் சேனாதிபதியாய்" அவருடைய பிரதிநிதியாய் இருக்கிறார் என்று ரோம சபை கூறுகிறது. ஆனால், தமக்குப் பதிலாக என்னுடைய இடத்தில் எனது பரிசுத்த ஆவியை அனுப்புகிறேன் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (யோவான் 14:16, 17, 16:7-15). "எங்கே இரண்டு மூன்றுபேர் என் நாமத்தில் கூடியிருக்கிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்" என்று கிறிஸ்து கூறினார் (மத்தேயு 18:20). இதனால், அவர் ஒரு சபையில் மட்டும் அச்சபையின் தலைமையோடு இருக்கிறார் என்று இதற்குப் பொருளல்ல. மாறாக, கிறிஸ்து அவருக்குச் சொந்தமான அவருடைய மெய்ச் சபைகள் கூடிவருகிற எல்லா இடங்களி லேயும் இருக்கிறார் என்பது இதற்குப் பொருள் (மத்தேயு 18:20). பரிசுத்த ஆவியின் மூலம் இது நிறைவேறுகிறது. கிறிஸ்து எல்லா இடங்களிலும் தன்னுடைய சபைகள் கூடிவருகிற இடங்களில் அவர்களோடு இருப்பது போல் போப்பால் ஒருநாளும் செய்யமுடியாது.*

*(18) கர்த்தருக்கும், ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்கும் மட்டுமே உரிய பெயர்களையும், பதவிகளையும். தலைமைத்துவத்தையும் சாதாரண மனிதர்களுக்கு அளித்து அவர்களை வேத போதனைகளுக்கெல்லாம் முரணானவிதத்தில் மகிமைப்படுத்துகிறது ரோம சபை. உதாரணத்திற்கு, போப்பிற்கு தலைமை ஆசாரியன்* (Pontiff or High Priest) *என்ற பெயரையும் பதவியையும் அது வழங்கியிருக்கிறது.* 'Pontiff' *என்ற பதம் இலத்தீன் மொழியில் இருந்து வந்தது. அதற்குப் பொருள் 'இடைவெளியை நிரப்புதல்'*

*என்பதாகும். பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் மக்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் இருந்து மத்தியஸ்தர்களாகப் பணிபுரிந்ததைப்போல, போப் கர்த்தருக்கும் பாவிகளாகிய மனிதர்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை நிரப்புகிற மத்தியஸ்தராக பணிபுரிகிறார் என்பது ரோமன் கத்தோலிக்க மதத்தின் நம்பிக்கை. ஆனால், வேதமோ ஒரேயொரு மத்தியஸ்தரை மட்டுமே அங்கீகரிக்கிறது. கல்வாரி சிலுவையில் தன்னையே நம்முடைய பாவங்களுக்கெல்லாம் ஒரே தடவை நிரந்தரமான பூரணமான பரிகாரப் பலியாகக்கொடுத்த மனிதராகிய இயேசு கிறிஸ்துவை மட்டுமே அந்த மத்தியஸ்தராக வேதம் அங்கீகரிக்கிறது. இந்தப் பலி மறுபடியும் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை; அத்தோடு இதைத் தொடர்ச்சி யாகக் கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை (யோவான் 14:6, 1 தீமோத் தேயு 2:5-6).*

*(19) பரிசுத்தவான்களையும்* (Saints), *அவர்களுடைய சிலைகளையும் வணங்கி வழிபட்டும் அவர்களிடம் ஜெபிப்பதன் மூலமும் தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை விடவும் அதிகமான மதிப்பளித்து வருகிறது ரோம சபை. இந்த வழிபாட்டு முறைகள் பற்றி அவர்கள் வெளியிட்டுள்ள பல வெளியீடு களின் மூலம் இதை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் ரோம சபை வழிபாட்டிற்கும்* (adoration) *பயபக்திக்கும்* (veneration) *இடையில் பெரிய வித்தியாசத்தைப் பார்க்கிறது. ஆனால், வழிபாடு அல்லது ஆராதனை என்பது வெளிப்புறமாக நம்முடைய பக்தியை வெளிப்படுத்துவதைக் குறிக்கும் வார்த்தையாக இருக்கிறது. அதேநேரம் பயபக்தி என்பது உள்ளார்ந்த ஜெபத்தில் வணங்கி வேண்டிக்கொள்ளுவதாகும். ரோம சபையின் இவ்வகையான போலித்தனமான வார்த்தை விளையாட்டின் அடிப்படையில் அச்சபையின் அநேக மக்கள் ஏமாற்றப்பட்டு விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டு கர்த்தருக்கு முன் குற்றவாளிகளாக நித்திய தண்டனைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். "விக்கிரக ஆராதனை" என்பது சிலை வணக்கத்தைக் குறிக்கும். "உன் தேவனாகிய கர்த்தரை நீ ஆராதித்து அவரையே நீ பணிந்து கொள்வாயாக" என்று இயேசு சொன்னார். தம்மைச் சார்ந்தவர்களை பரிசுத்தவான்களையும்* (Saints) *சிலைகளையும் வணங்க வைக்கும் ரோம சபை விக்கிரக ஆராதனையாகிய குற்றச் செயலில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால், கர்த்தரின் பத்துக்கட்டளைகளில் இரண்டாவது கட்டளையை முற்றாக நிராகரித்துவிடுகின்ற ரோம சபை பத்தாவது கட்டளையை மட்டும் இரண்டாக்கி வைத்திருப்பது ஏன்?*

*(20) ரோம சபையில், கிறிஸ்துவினுடைய ஆவிக்கு இடமில்லை. ரோமர் 8:9ல் "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்லவே" என்று பவுல் கூறுகிறார். இயேசு கிறிஸ்து இரக்கமுள்ளவராகவும், அன்புள்ள வராகவும் இருந்து எவராவது தவறு செய்திருந்தபோதும் அவர்களை ஒருபோதும் துன்புறுத்தாமலும் இருந்தார். ஆனால், தன்னுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்படவில்லை என்ற ஒரே காரணத்துக்காக அநேக கிறிஸ்தவர்களைக் கொடூரமாகத் துன்புறுத்திப் பலியிட்டது ரோம சபை.*

*(21) மதச்சடங்காச்சாரியங்களின் மூலமும், ஜெபத்தினாலும், பெரிய ஆராதனைக் கூட்டங்களில் 'மாஸ்' நடத்தியும் மக்களுக்கு ஆத்மீக விடுதலை கொடுக்க முயல்கிறது ரோம சபை. ஆனால், பாவத்தை முழுமையாக நிவிர்த்தி செய்த இயேசு கிறிஸ்துவில் ஒருவர் வைக்கும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்கிறது கர்த்தருடைய வேதமும், கிறிஸ்துவினுடைய திருச்சபையும். இத்தகைய இரட்சிப்பு ஒருவரை தேவனில் உண்மையான அன்பை வைக்கவும், அவரின் மகிமைக்காக அனைத்து நற்கிரியைகளையும் செய்யவும், அவருக்கு நன்றியுள்ளவராகவும் அவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவராகவும் இருக்கும்படியாகவும் மாற்றுகிறது (எபேசியர் 2:8-9, ரோமர் 5:1, எபேசியர் 1:6-7).*

*(22) கிறிஸ்துவின் பரிகாரப் பலியின் பலாபலன்களை அடையும்படியாக, தங்களுடைய பாவங்களுக்கு பரிகாரமாக பாவமன்னிப்புக்குரிய பல நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தன்னைச் சார்ந்தவர்களை வற்புறுத்தி வழிநடத்துகிறது ரோம சபை. கிறிஸ்துவின் கல்வாரிப் பலி பூரணமானதில்லை என்பது போலவும், அதைப் பூரணமாக்க பாவிகள் மேலும் பாவப் பரிகாரச் செயல்களில் ஈடுபடவேண்டும் என்பது போலவும் நடந்து கொள்ளுகிறது ரோம சபை. பாவிகள் தொடர்ந்து பாவப் பரிகாரச் செயல்களில் ஈடுபடவேண்டுமென்பதல்ல கர்த்தர் எதிர்பார்ப்பது; அவர்கள் தங்களுடைய பாவங்களில் இருந்து மனந்திரும்புவதையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். அதாவது, "பாவத்திலிருந்தும், அநீதிகளிலிருந்தும் எல்லா விதமான துன்மார்க்கத்திலிருந்தும் மனந்திரும்ப வேண்டும்" என்கிறார் கர்த்தர் (ஏசாயா 55:7, மத்தேயு 9:13, 1 கொரிந்தியர் 6:9-11). ஆனால், எந்த விதமான வேத ஆதாரமுமில்லாமல் ரோம சபை மக்களைத் தன்னுடைய போலித்தனமான வழிகளைப் பின்பற்றும்படிச் செய்துவருகிறது.*

*(23) தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தவர்களை மன்னிக்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருப்பதாக ரோம சபை தொடர்ந்து பொய் சொல்லி வருகிறது. குற்றவாளி இன்னொரு குற்றவாளியை மன்னிக்க முடியாது. திமிர்வாதக்காரனைப் பார்த்து "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கு போ" என்று சொல்லி அவனுடைய நோயைக் குணப்படுத்தியதன் மூலம் பாவங்களை மன்னிக்கத் தனக்கு அதிகாரம் உண்டென்பதை இயேசு சுட்டிக்காட்டினார் (மத்தேயு 9:2-7). ஒருவனுடைய நோயை நீக்குவது எத்தனை சுலபமோ அதேபோல் அவனுடைய பாவத்தையும் தன்னால் மட்டுமே நீக்க முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். மேலும் "பிதாவே எங்கள் பாவங்களையும் கடன்களையும் மன்னித்தருளும்" என்று ஜெபிக்கும்படியாக நமக்கு இயேசு கற்றுக்கொடுத்தார். தேவனுக்கு மட்டுமே ஒருவரின் பாவங்களை மன்னிக்கவோ அல்லது மன்னிக்காமல் போகவுமான அதிகாரம் இருக்கிறது என்று இயேசு கூறினார் (மத்தேயு 6:9-15). பாவங்களை மன்னிக்கக் கூடிய தேவனுக்கு மட்டுமே உரிய தன்மையை வேறு எவரும் கொண்டிருக்க முடியாது.*

*(24) தேவனுடைய கிருபையின் மூலம் மெய்யான விசுவாசி கிறிஸ்துவுக்குள் அடைகிற பாவ மன்னிப்பின் நிச்சயத்துவம், நித்திய வாழ்வு, சந்தோஷம், மிகப் பெரிய சமாதானம் போன்ற நற்காரியங்களை ரோம சபையினால் அநுசரிக்கப்படுகிற சடங்காச்சாரியங்கள் மூலமும், மாஸ் போன்ற சம்பிரதாயங்கள் மூலமாகவும் அடையலாம் என்று ரோம சபை கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது (யோவான் 5:24, 5:11-13).*

*(25) ரோமன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த ஒருவர் மரிக்கும்போது அவர் "உத்தரிக்கும் ஸ்தலம்"* (Purgatory) *என்ற இடத்தை அடைவதாகவும், அவர் தன்னுடைய மன்னிப்பைப் பெற முடியாத சில நிச்சயமற்ற பாவங்களுக்காக அங்கே தண்டிக்கப்பட்டப்பிறகு ரோம சபை செய்கின்ற ஜெபத்தினாலும் மாஸினாலும் மட்டுமே மன்னிப்பைப் பெற முடியுமென்பது ரோம சபையின் போலிக்கூற்று. ஆனால், ஓர் ஆத்துமா கிறிஸ்துவின் மூலம் கிருபையினால் மட்டுமே இரட்சிப்படைகிறது என்பதுதான் வேதம் போதிக்கும் உண்மை (எபேசியர் 1:7). ஞானஸ்நானம் பெறாமல் போகும் குழந்தைகளுடைய பாவங்களைக் கர்த்தர் மன்னிக்க மாட்டார் என்றும் அவர்கள் நரக தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் ரோம சபை கூறுகிறது. நீதியும், எல்லையற்ற கருணையுமுள்ள தேவன் இந்த ஒரு காரணத்துக்காக குழந்தைகளுக்கு நித்திய தண்டனை அளிப்பார் என்பது போலிருக்கிறது ரோம சபையின் போலித்தனமான போதனை. ஆனால், கிறிஸ்துவின் மெய்யான சபை விசுவாசிகள் மரிக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் தங்களுடைய சகல பாவங்களும் மன்னிக்கப் பட்டது என்ற நிச்சயத்துடன் கிறிஸ்துவின் மகிமைக்குள் செல்கிறார்கள் என்பதே மெய்க் கிறிஸ்தவத்தின் போதனை (2 கொரிந்தியர் 5:6-8; பிலிப்பியர் 1:21-23).*

*(26) அப்போஸ்தலர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி அநேக தவறான போலி உபதேசங்களை ரோம சபை தன்னில் கொண்டு சத்தியத்தை விட்டு விலகிப்போன சகல அடையாளங்களையும் கொண்டு நிற்கிறது. "பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிக்கும் பிசாசுகளின் உபதேசத்திற்கும் செவிக்கொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்" என்று அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ளார்கள் (1 தீமோத்தேயு 4:1). இவ்விதமாக ரோம குருமார்கள் மற்றவர்களுடைய பாவங்களை மன்னிக்கத் தங்களுக்கு அதிகாரம் உண்டு என்றும், அப்பத்தை இயேசுவின் சரீரமாக மாற்றும் வல்லமை தங்களுக்கு உண்டு என்றும், துறவிகளும், கன்னியாஸ்திரிகளும் திருமணம் செய்துகொள்ளத் தடைகளை ஏற்படுத்தியும் தங்களைச் சார்ந்தவர்களை வழிநடத்தி வருகிறார்கள். ஆனால் தேவன் சகலருக்குமாக திருமணத்தை ஆதியிலே ஏற்படுத்தினார் (1 தீமோத்தேயு 2:1-4, 12 எபிரெயர் 13:4). அத்தோடு, பழைய ஏற்பாட்டிலே ஆசாரியர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டு அந்த சந்ததியிலிருந்துதான் "ஆசாரியர்கள்" தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் விதித்திருந்தார்.*

*நான் ஏன் ரோமன் கத்தோலிக்கன் இல்லை என்பதற்கு கிறிஸ்தவ வேதத்தில் இருந்து இன்னும் அநேக சாட்சியங்களை உங்கள் முன் என்னால் வைக்க முடியும். ஆனால், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளை கவனமாக ஆராயும் மக்களுக்கு நான் இதுவரை தந்துள்ள காரணங்களே போதுமானதாகும். அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார், "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தி னாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டு இருக்கிறது" (யோவான் 20:31). "அழிவுள்ள வஸ்துகளாகிய வெள்ளி யினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம்" என்பதும் நமக்குத் தெரிய வேண்டும் (1 பேதுரு 1:18-19).*

---

***இந்த ஆக்கத்தைப் பற்றிய ஓர் விளக்கம்:***

*"நான் ஏன் ரோமன் கத்தோலிக்கன் இல்லை" என்ற இந்த ஆக்கத்தை* Chapel Library *வெளியிட்டது. இந்த ஆக்கத்தைப் புரிந்துகொள்ள கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காரணங்களையும் சிறிது சிந்தித்துப் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும். சிந்தனையோடு வாசிக்கிறவர்களுக்கு ரோமன் கத்தோலிக்க மதத்தின் போலிப் போதனைகளும், புரட்டுக்களும் புரியாமல் போகாது.*

*அத்தோடு இதில் கிறிஸ்தவ திருச்சபையை ரோமன் கத்தோலிக்க மதத்தோடு ஒப்பிட்டு விளக்கும்போது ஆக்கத்தின் ஆசிரியர் சில இடங்களில் திருச்சபையின் உலகளாவிய* (Universal, Catholic) *தன்மையைப் பற்றி விளக்கும்போது அதை* Universal invisible *சபையாக விளக்கியிருக்கிறார். அந்த விளக்கத்தை வாசகர்கள் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். திருச்சபையானது* (Church) *நாம் எப்போதுமே புறக்கண்களால் காணக்கூடியதாகத்தான் உலகத்தில் இருக்கும். கிறிஸ்து இந்த உலகத் தில் நிறுவிய திருச்சபை கண்களால் நாம் பார்க்கக் கூடியதாக பெந்தகொஸ்தே நாளில் நிறுவப்பட்டது. உலகம் முழுவதும் நிறுவப்பட்டு இன்று காணப்படுகின்ற திருச்சபைகள் அனைத்தும்* (Universal local churches) *நாம் கண்களால் எப்போதும் காணக் கூடியதே. கண்களால் பார்க்க முடியாத திருச்சபை என்று ஒன்று உண்மையில் இல்லை. அந்தவிதமாக திருச்சபையை வர்ணிப்பது தவறு. ஆனால், கிறிஸ்துவின் திருச்சபையை ஆத்மீக ரீதியில் விளக்கும்போது அதாவது, பரிசுத்த ஆவியால் மறுபிறப் படைந்த தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து மக்களைக் குறித்து விளக்கமளிக்கும்போது அந்த விசுவாசக்கூட்டத்தை மொத்தமாக ஒரே இடத்தில் நாம் கண்களால் பார்க்க முடியாது* (Invisible universal church) *என்று இறையியல் விளக்கம் கொடுப்பது வழக்கம். அதில் எந்தத் தவறும் இல்லை. இந்த விதத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து மக்களையும்* (The elect people of God) *குறித்துப் பேசுவது இறையியல் அறிஞர்களின் வழக்கம். அந்த அடிப்படையிலேயே திருச்சபைக்கு இந்த ஆக்கத்தை எழுதியுள்ளவர் விளக்கமளித்திருக்கிறார். அது திருச்சபையின் ஒரு அம்சத்தைப்* (one aspect of the doctrine of the church) *பற்றிய விளக்கம் மட்டுமே என்பதையும் அதுவே திருச்சபை பற்றிய முழுமையான விளக்கம் அல்ல என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.*

# சபை வாழ்க்கை இல்லாத கிறிஸ்தவ வாழ்க்கையா!

இயேசு கிறிஸ்து திருச்சபையை உருவாக்க இந்த உலகத்துக்கு வந்தார். அதற்காகவே ஆரம்பத்தில் எழுபது பேரையும் பின்னால் பன்னிருவரையும் தயார் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பினார் (மத்தேயு 28). அவர்களை அடித்தளமாகக் கொண்டு பெந்தகொஸ்தே நாளில் திருச்சபை இந்த உலகத்தில் ஓர் அமைப்பாக நிறுவப்பட்டது (அப்போஸ். 2). இயேசு கிறிஸ்து மறுபடியும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வருகிறபோது தன்னுடைய சபையைத் தன்னோடு அழைத்துச் செல்லப் போகிறார். அந்த நாள் மட்டும் தொடர்ந்து அவர் தன்னுடைய சபைக்குத் தேவையான வரங்களை அளித்து (எபேசியர் 4), அதைப் பராமரித்து போஷித்துக் காத்து (எபேசியர் 5) வருவதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தவரை திருச்சபை ஒரு சாதாரண அமைப்பல்ல; அது அவருடைய மணவாட்டி. அவரைவிட அதன் மேல் அக்கறை கொண்டவர்கள் இருக்க முடியாது. பிதாவின் வலது பாகத்தில் வீற்றிருந்து ஆட்சி செய்யும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு திருச்சபையின் நலன்களே இலக்காக இருந்து வருகின்றன. திருச்சபை மேல் அவருக்கு அத்தனை அக்கறை இருப்பதால் தான் திருச்சபைப் பற்றிய போதனைகள் புதிய ஏற்பாடு முழுவதும் நிரம்பி வழிகின்றன. தன்னுடைய திருச்சபை இந்த உலகத்தில் தனக்கு சாட்சியாக, தனக்கு மகிமையளிப்பதாக உலகெங்கும், நாடெங்கும், நகரங்கள் தோறும் நிறுவப்பட்டு வளர்ந்து வரவேண்டுமென்பதே இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு.

இந்தளவுக்கு திருச்சபை மேல் கர்த்தராகிய இயேசு அக்கறை கொண்டிருக்கிறபோது கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு அதையெல்லாம் கவனிக்காமல், அவர் காட்டுகின்ற அக்கறையை நாம் திருச்சபை மேல் காட்டாமல் இருப்பதைப் போன்ற முட்டாள்தனம் இருக்க முடியாது. இருந்தாலும் அந்தத் தவறையே இன்றைக்கு அநேகர் செய்து வருகிறார்கள். சுயநலம் அதிகரித்துப்போய் தனக்காக மட்டுமே வாழப் பழகிப்போன நவீன சமுதாய மக்களின் பிசாசுத்தனமான சிந்தனைகள் இன்று கிறிஸ்தவர்களிடம் இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. கிறிஸ்துவின் திருச்சபைக்கு மதிப்புக் கொடுக்கமாலும், அதன் நலனில் அக்கறை காட்டாமலும், அதோடு தன்னை இணைத்துக் கொண்டு வாழப் பழகாமலும் கிறிஸ்தவன் என்ற பெயரோடு இந்த உலகில் எவரும் நடமாடி வருவது அந்தப் பெயருக்கே களங்கம் ஏற்படுத்துவதாகும். கிறிஸ்தவன் என்ற பெயரை நாம் வைத்துக்கொண்டால் கிறிஸ்து அக்கறை காட்டிய விஷயங்களில் நமக்கு அக்கறைகாட்டத் தெரிந்திருக்க வேண்டும். கிறிஸ்து

வின் இலக்குகள் நம்முடைய இலக்குகளாக இருக்க வேண்டும். கிறிஸ்து வின் நோக்கங்கள் நம்முடைய நோக்கங்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிறிஸ்தவன் என்ற பெயரே பொருளற்றதாகிவிடும்.

இன்று என்னால் பொறுத்துக்கொள்ள முடியாமல் இருக்கும் ஒரு காரியம், கிறிஸ்தவர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆயிரக்கணக் கானோர் கிறிஸ்துவின் திருச்சபைக்கு வெளியில் தான்தோற்றித்தனமாகத் திரிந்து வருவதுதான். இவர்கள் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை அடைந்திருப்பதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். ஆனால், கிறிஸ்து தன் மணவாட்டியான சபைமேல் காட்டுகிற ஆர்வமும் அக்கறையும் இவர்களுடைய வாழ்க்கையில் துளிக்கூடப் பார்க்க முடிவதில்லை. கிறிஸ்துவின் திருச்சபையில் இணைந்து வாழ வேண்டிய அவசியத்தையும் இவர்கள் உணராதவர்கள் போல் வாழ்ந்து வருகிறார்கள். அநேகருக்கு திருச்சபை என்பது இருந்திருந்து ஓய்வு நாளில் மனசுக்கு இதமளிக்கும் ஒரு செய்தியைக் கேட்பதற்கும், திருவிருந்தில் கலந்துகொள்ளு வதற்கும் வசதியாக இருக்கும் ஓர் இடமாக மட்டுமே இருந்து வருகிறது. அதற்கு மேல் திருச்சபையைப் பற்றி அவர்கள் எண்ணியும் பார்ப்பதில்லை; அதன் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை. தன்னுடைய நலன்களுக் காகவே கிறிஸ்து அதை நிறுவியிருக்கிறார் என்ற உணர்வும் அவர்களுக்கு இருப்பதில்லை.

இவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் தங்களுடைய வீடு, வேலை, குடும்பம், வசதிகள் அனைத்திற்கும் மட்டுமே முதலிடம் கொடுத்து வாழ்ந்து வருகிறார்கள். இதற்கெல்லாம் பங்கமேற்படாமல் இருந்தால் மட்டுமே திருச்சபைக்கும் இவர்களுடைய வாழ்க்கையில் எங்காவது ஒதுக்குப் புறமான ஓர் இடம் கிடைக்கும். ஓய்வு நாளில் வேலை செய்வதும், வேலை மாறினால் எந்த சபையிலும் நிலைத்திராமல் ஊர் ஊராகப் போய்க் கொண் டிருப்பதும், சக சகோதர்களின் வாழ்க்கை பற்றி அக்கறையில்லாமல் வாழ்வ தற்கும் பெயரா கிறிஸ்தவம்? கிறிஸ்து என் பாவங்களையெல்லாம் தன்னு டைய இரத்தினால் கழுவியிருக்கிறார், நான் அவருக்கே சொந்தம், அவரைப் பின்பற்றியே இனி வாழப்போகிறேன் என்றெல்லாம் சாட்சி சொல்லி ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டு நாடோடிகளைப் போல கிறிஸ்து வின் பெயரை வைத்துக் கொண்டு வாழ்வதற்குப் பெயரா கிறிஸ்தவம்? இந்தமுறையில் வாழ்வதற்குப் பெயரா விசுவாச வாழ்க்கை? இதைவிட உலகத்து மனிதன் தன்னுடைய நோக்கங்களுக்காக உயிர் கொடுத்து வாழ்ந்து கிறிஸ்தவர்களுடைய முகத்தில் அசடு வழியச் செய்துவிடுகிறானே! கிரிக்கெட் விளையாட்டு சீஸன் ஆரம்பித்துவிட்டால் ஆபிஸ் வேலைகளைக் கூடத் தள்ளிவைத்துவிட்டு அது முடியுமட்டும் அதுவே வாழ்க்கையாக இருந்து விடுகிறான். மதுரை மீனாட்சி கோவிலுக்கு அன்றாடம் போய் வருகிற ஆயிரக்கணக்கான கூட்டத்தை நான் பார்த்திருக்கிறேன். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து லாட்ஜ் எடுத்துத் தங்கி பத்து நாட் களுக்கு ஒவ்வொரு நாளும் நடக்கும் அத்தனைப் பூசைகளிலும் அக்கறையோடும், ஆர்வத்தோடும் கலந்துகொள்கிற இந்துவுக்கு அவனு டைய போலித் தெய்வத்தில் இருக்கிற அக்கறைகூட ஜீவனுள்ள தேவனை

*விசுவாசிக்கிறோம் என்று பறைசாற்றும் நம் மக்களிடம் இல்லையே என்பதைப் பார்க்கிறபோது என்னால் பொறுக்க முடியாமல் போகிறது.*

*இதையும்விட அக்கிரமமான செயலாக நான் கருதுகிறதொன்றுண்டு. கிறிஸ்தவர்களாகிய சிலர் தங்களுடைய வேலை நிமித்தம் அடிக்கடி ஊர் மாறிக்கொண்டிருக்கிறார்கள். வேலை அவசியம்தான்; அது கொண்டுவரும் பதவியும், பணமும் அவசியந்தான். இல்லையென்று நான் சொல்ல வரவில்லை. இப்படி ஊர் மாறுகிறபோதெல்லாம் அவர்கள் திருச்சபை யொன்றை நாடிச் சென்று அங்கே தங்களை இணைத்துக் கொள்ளுவ தில்லை. தாங்களே ஒன்றை பெட்டிக்கடை ஆரம்பிப்பதைப்போல தங்களைப் போலத் திரியும் ஒருசிலரைத் தேடிக்கொண்டு தங்களுக்கு வசதியாக ஆரம்பித்து விடுகிறார்கள். அடுத்தமுறை வேலை மாறும்போது இந்தப் பெட்டிக்கடை சபையை அம்போ என்று விட்டுவிட்டு இன்னொரு இடத்துக்குப் போய் அங்கும் வசதியாக ஒரு பெட்டிக்கடை சபையை ஆரம்பித்து விடுகிறார்கள். இவர்களைப் போலத்திரியும் சிலர் அந்த ஊரிலும் இதற்கு வசதியாக நிச்சயம் இருப்பார்கள். இந்த மாதிரியான திருச்சபை வாழ்க்கை முறையையும், கிறிஸ்தவ நடைமுறையையும் வேதத் தில் எங்கே வாசிக்கிறோம்? இதை வாசித்துவிட்டு இப்படி எழுதியிருக் கிறாரே என்று சிலர் ஆத்திரப்படலாம். அதைவிட்டுவிட்டு நீங்கள் ஏன் நான் சொல்லுகிறதில் உள்ள பொருளை ஒருமுறை சிந்தித்துப் பார்க்கக் கூடாது. இந்த மாதிரியான வாழ்க்கையை வாழவும், நடந்துகொள்ளவும் இயேசு விசுவாசிக்கு அனுமதியளித்திருக்கிறார் என்று வேதத்தில் இருந்து உங்களால் எனக்கு விளக்க முடியுமா? இப்படியெல்லாம் வாழ்வதற்குப் பெயர் கிறிஸ்தவமா என்றுதான் உங்களை நான் கேட்கிறேன்.*

*இயேசு தன்னுடைய மணவாட்டியான திருச்சபையை நிறுவியிருப்பது எதற்காக? என்று தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். தன்னுடைய இரத்தத்தினால் நம்முடைய பாவங்களையெல்லாம் கழுவி யெடுத்து நமக்கு மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் கொடுத்து தன்னுடைய சரீரத்தில் நம்மை இணைத்துக்கொண்டுள்ள கிறிஸ்து நம்முடைய நலன்களையெல்லாம் மனதில் வைத்தே தன்னுடைய சரீர மாகிய சபையை இந்த உலகத்தில் நிறுவியிருக்கிறார். பாவிகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கு விடுதலை தந்த இயேசு நாம் பரிசுத்தமாக தொடர்ந்து இந்த உலகத்தில் வாழ்ந்து வருவதற்கு வசதியாகத்தான் தன்னு டைய சபையை இந்த உலகத்தில் நிறுவியிருக்கிறார். திருச்சபையால் இயேசு மகிமைப்படுத்தப்படுகிறாரே தவிர திருச்சபையால் இயேசுவுக்கு நன்மை யல்ல. நம் நலனுக்காகவே திருச்சபை நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே, கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் உண்மையிலேயே மனந்திரும்புதலினாலும், விசுவாசத்தினாலும் இணைக்கப்பட்டிருப்போமானால் இந்த உலகத்தில் கிறிஸ்துவின் சரீரமாக இருந்து வருகிற அவருடைய திருச்சபையில் நாம் அங்கம் வகிக்காமல் வாழ முடியாது. திருச்சபைக்கு வெளியே இருந்து வாழ்ந்து வருகிற கிறிஸ்தவனை கிறிஸ்து அறியாமல் இருக்கிறார். நம்முடைய சரீரத்தின் அங்கங்கள் நம்முடைய சரீரத்தை விட்டு விலகிப் போவதில்லை. நம்முடைய சரீரத்தில் தொடர்ந்து இருக்கும்போதே அவை நம்முடைய*

*அங்கங்களாக இருக்கின்றன; உயிர்த்துடிப்போடு அவை தொடர்ந்து வாழவும் முடியும். கிறிஸ்துவின் சரீரத்துக்கு வெளியில் இருந்து அவருடைய அங்கங்கள் ஆத்மீக வாழ்க்கை வாழ முடியும் என்று எண்ணுவது வேதத்துக்கு முரணானது மட்டுமல்ல, இயற்கைக்கெல்லாம் அப்பாற்பட்டது.*

*கிறிஸ்து திருச்சபை மூலம் நம்முடைய ஆத்மீக நலன்களுக்காக என்ன செய்கிறார் என்பதை இனி நாம் சிந்தித்துப் பார்ப்போம்.*

*(1) நாம் ஜீவனுள்ள வாழ்க்கை வாழ்ந்து அவருடைய சரீரத்தில் இணைக்கப் பட்டுள்ள சக விசுவாசிகளோடு இணைந்து அவரை ஆராதிக்கும் வசதியைக் கர்த்தர் திருச்சபை மூலம் ஏற்படுத்தித் தந்திருக்கிறார். இதை அவர் நம்முடைய நன்மைக்காக மட்டுமல்லாமல் தன்னுடைய மகிமைக் காகவும் செய்திருக்கிறார் என்பதை நாம் உணர்வது அவசியம். கர்த்தரை ஆராதனை செய்து வாழ்வதற்காகவே மனிதன் ஆரம்பத்தில் படைக்கப்பட் டான். அது இயற்கையின் நியதி. விசுவாசத்தை அடைந்த மனிதன் கர்த்தரை ஆராதித்து வாழ வேண்டியது அவனுடைய விசுவாசத்தின் அடையாளமாகவும், கடமையாகவும் இருக்கிறது. விசுவாசி என்ற பெயரை வைத்துக்கொண்டு திருச்சபை மூலம் கர்த்தருடைய ஆராதனையில் அக்கறை காட்டாதவன் நிச்சயம் ஒருநாளும் விசுவாசியாக இருக்க முடியாது. நாம் ஒவ்வொரு நாளையும் கர்த்தரின் ஆராதனையோடு ஆரம்பிக்க வேண்டும். நம்முடைய வீட்டில் கர்த்தர் ஆராதிக்கப்பட வேண்டும். நம்முடைய வேலைகள் அனைத்தையும் கர்த்தரின் மகிமைக் காக தேவ பயத்தோடு அவரை ஆராதித்து செய்ய வேண்டும். இதுவே வேதம் போதிக்கும் விசுவாசியின் வாழ்க்கை முறை. இதனால்தான் கர்த்த ரின் திருச்சபை வாரத்தின் முதல் நாளில் கூடி அவரை ஆராதனை செய்து வருகிறது. அதைக் கர்த்தரே ஏற்படுத்தியிருக்கிறார். வார ஆரம்ப நாளான ஓய்வு நாளில் நாம் இருக்க வேண்டிய இடம் கர்த்தரின் திருச்சபை. அங்கே நாம் கூடி வருகிறபோதே அவர் தன் வார்த்தையில் சொல்லியிருக்கிறபடி நம் மத்தியில் பிரசன்னமாகி நம்மோடு பேசுகிறார் (மத்தேயு 18:20). இந்த வசதியும், ஆசீர்வாதமும் உலகத்து மக்களுக்கு இல்லை. திருச்சபையில் கூடிக் கர்த்தரைப் பாடி, ஜெபித்து, வசனத்தைக் கேட்டு ஆராதிப்பதும் அவருடைய மக்களோடு ஐக்கியத்தில் வருவதும் எத்தனை உயர்வான மகிமையான காரியம். இன்றைக்கு அநேக சபைகள் கர்த்தரின் ஆராதனையை அலங்கோலப்படுத்தி அவருக்கு விரோதமானச் செயலை ஆராதனை வேளைகளில் செய்து வருகிறார்கள். தன்னை ஆராதிக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளையிட்டுள்ள கர்த்தர் அந்த ஆராத னையை அவருடைய வார்த்தையைப் பின்பற்றி அவருக்குகந்த முறையில் மட்டுமே செய்யச் சொல்லியிருக்கிறார் (யாத்தி. 20:1-11). நம்முடைய விருப்பத்தின்படி நாம் ஆராதனையில் ஈடுபடாமல் ஆராதனை மூலம் கர்த்தரை மகிமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருக்கு விரோதமான முறையில் ஆராதனை நடத்தப்படும் இடங்களில் கர்த்தரின் பிரசன்னம் இருக்காது. எருசலேம் தேவாலயத்தை விட்டு அவருடைய பிரசன்னம் விலகிப் போனதைப் போல அலங்கோல மாக ஆராதனை நடத்தப்படும் இடங்களில் இருந்தும் கர்த்தரின்*

*பிரசன்னம் அகன்றுவிடும்.*

*(2) திருச்சபைக்குப் போதகர்களை அளித்து நாம் பரிசுத்தத்தில் வளர்ந்து பூரணமடையும்படி அவர்கள் மூலமாக நம்மைப் போஷிக்கிறார் (எபேசியர் 4:11-16). கர்த்தர் திருச்சபை மட்டும் நிறுவாமல் அந்தத் திருச்சபைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து செய்து வருகிறார். திருச்சபைக்குத் தானே தலையாக இருப்பதால் (எபேசியர் 5) தன்னுடைய கட்டளைகளின்படி அந்தத் திருச்சபை நடந்துவர அவசியமான போதகர் களை தொடர்ந்து அதற்கு அளித்து வருகிறார். ஆதியில் அப்போஸ்தலர் களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும் அளித்த தேவன் இன்றைக்கு போதகர்களை அளித்து வருகிறார் (எபேசி. 4:11–16; 1 தீமோ. 3). வேதத்தை மட்டும் தெளிவாகப் பிரசங்கித்து வேத வழிகளில் மட்டும் ஆத்துமாக்களைத் திருச்சபைகளில் வழிநடத்துவது இவர்களுடைய கடமையாக இருக்கின்றது (2 தீமோ. 4:2, 3). அதுமட்டுமல்லாமல் ஆத்துமாக் களுடைய ஆத்மீகத் தேவைகளுக்குத் தகுந்த விதத்தில் வேத ஆலோசனை களை அவசியமான நேரங்களிலெல்லாம் வழங்கி வழிநடத்துவதும் அவர்களுடைய பணியாக இருக்கிறது. இதைப் போதகக் கண்காணிப்பு என்று வேதம் அழைக்கிறது (1 பேதுரு 5:1–4). இந்தப் பணிகளைச் செய்வதற் காக ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்கள் இருந்து ஆத்துமாக்களைக் கர்த்தரின் பாதையில் வழிநடத்த வேண்டுமென்று கர்த்தர் விதித்திருக்கிறார். இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய அம்சம் எவரும் தங்களைத் தாங்களே போதகர்களாக நியமித்துக் கொள்ள முடியாது என்பதுதான். எபேசியர் 4:11-16, கிறிஸ்துவே அவர்களை சபைக்குக் கொடுக்கிறார் தெளிவாக என்று விளக்குகிறது. கர்த்தர் சபைக்குக் கொடுக்காமல் தங்களைத் தாங்களே போதகர்களாக நியமித்துக் கொள்ளுகிறவர்கள் ஆடுகளை மேய்க்க வந்தவர்களல்ல; திருட வந்தவர்கள்.*

*ஆத்துமாக்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் பரிசுத்தமாக வளர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்த அவர்களுக்கு திருச்சபையும் அதன் போதகர்களும் இன்றியமையாதவர்கள். இவையில்லாமல் கிறிஸ்தவ வாழ்க்கையை இந்த உலகத்தில் சிறப்பாக நடத்திவிடலாம் என்று நினைப் பது வெறுங்கனவு. அப்படி வாழ்ந்துவிட முடியுமானால் கர்த்தர் தன்னுடைய ஞானத்தின்படி சபையை நிறுவி அதற்குப் போதகர்களைத் தொடர்ந்து அளித்து வரமாட்டார். திருச்சபையும், போதகக் கண்காணிப் பும் இல்லாமல் வாழ முயல்கிறவர்கள் வேதத்தைப் பொறுத்தவரையில் ஆணவமுள்ளவர்களாகவும், கர்த்தருக்குக் கீழ்ப்படியாத இருதயத்தை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.*

*(3) திருச்சபை மூலம் சத்திய வசனத்தைப் பிரசங்கங்களினாலும் வேத பாடங்களின் மூலமும் கேட்டு ஆத்மீக வளர்ச்சியடையும்படிச் செய்கிறார். கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் பரிசுத்தமாக வாழ்ந்து கர்த்தரை மகிமைப் படுத்த திருச்சபை மூலம் அவன் வேத பிரசங்கங்களைக் கேட்கும் வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார் கர்த்தர். இதற்காகவே அவர் திருச்சபைக்குத் தொடர்ந்து போதகர்களை அளித்து வருகிறார். போதகர்களின் மிக முக்கிய*

மான பணிகளில் ஒன்று தங்களுடைய நேரத்தைப் பயன்படுத்தி வேதத்தை அன்றாடம் ஆராய்ந்து படித்து ஆத்துமாக்களைப் போஷிக்கும்படியான நல்ல வேதப் பிரசங்கங்களைத் தயாரித்து வாரா வாரம் அளிப்பது. அதைத் தவிர வேத பாடங்களையும் அவர்கள் தயார் செய்து ஆத்துமாக்களுக்கு அளித்து அவர்கள் வேத வசனங்களில் வளரத் துணை செய்ய வேண்டும். திருச்சபையோடு தன்னை இணைத்துக் கொண்டு இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் கடமையாக இருக்கின் றது. இது கிறிஸ்தவர்கள் ஆத்மீக வளர்ச்சிபெற அவசியமானது. இது இல்லாமல் இருந்துவிடலாம் என்று நினைப்பது ஆணவத்தின் அடையா ளம். நாமே வேதத்தை வாசிக்கும் வசதி இருந்த போதும், இந்த முறையில் வேத விளக்கங்களைப் பிரசங்கத்தின் மூலம் கேட்கிறபோது கர்த்தர் நம்மோடு விசேஷமாக வல்லமையோடு பேசுகிறார். இதை உதாசீனம் செய்வது நம்முடைய அழிவுக்குத்தான் வழிவகுக்கும்.

பிரசங்கம் (Preaching) ஆத்துமாக்களைப் போஷிக்க கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருக்கும் அற்புதமான கிருபையின் சாதனம். இதை எல்லோரும் பயன்படுத்திவிட முடியாது. கர்த்தரால் திருச்சபைக்குத் தரப்பட்டுள்ள திறமையான போதகர்களே இதைச் செய்ய முடியும். ஒருவன் தன்னை டாக்டர் என்று அழைத்துக் கொண்டால் மட்டும் அவன் டாக்டராகிவிட முடியாது. அதற்கான தகுந்த பயிற்சிகளையும், அங்கீகாரத்தையும் அவன் அடைய வேண்டும். அதேபோல்தான் கர்த்தர் பிரசங்கிகளைச் (Preachers) சபைக்கு அளிக்கிறார். பிரசங்கிகளுடைய பணி பெரியது. அவர்கள் வேதத்திற்கு மட்டும் கட்டுப்பட்டு வேதபோதனைகளில் இருந்து சிறிதும் விலகாது பிரசங்கத்தைக் கர்த்தர் மகிமை அடையும்படி திருச்சபைகளில் கொடுக்க வேண்டும். பிரசங்கிகள் பிரசங்கத்தை ஆவியின் வல்லமையோடு செய்ய வேண்டும்.

இன்றைக்கு திருச்சபையோடு தங்களை இணைத்துக் கொள்ளாமலும் வேதப்பிரசங்கத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்காமலும் ஊர் ஊராக வாழ்ந்து வருகிறவர்கள் தொகை நம்மினத்தில் அதிகம். ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி திருச்சபைக்கு வெளியில் இருந்து கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் இவர்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இது தெய்வத் துரோகம். இந்திய நாட்டில் பிறந்து வாழ்ந்து கொண்டு இந்திய அரசிய லமைப்புக்குக் கட்டுப்பட மாட்டேன், இந்திய குடியுரிமை பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று விதண்டாவாதம் செய்கிறவர்களை நாம் பார்த்ததில்லை. ஆனால், கர்த்தரிடமிருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொண் டிருக்கிறேன் என்று சொல்லுகிற அநேகர் கர்த்தரின் திருச்சபையை உதறிவிட்டும், பிரசங்கங்களை வாராவாரம் கேட்காமலும் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். உலகத்தில் காணப்படும் உள்ளூர் திருச்சபையோடு தன்னை இணைத்துக்கொள்ளாமல் தன் மனம் போன போக்கில் வாழ்க்கிறவர்களை கிறிஸ்து அறியாதிருக்கிறார். அவர்கள் கிறிஸ்துவின் ஆளுகைக்குக் கட்டுப்பட மறுக்கிறவர்கள். கிறிஸ்துவின் பெயரை சூட்டிக்கொண்டு கிறிஸ்துவின் திருச்சபைக்கு எதிராக நடக்கிறவர்கள்.

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- குடும்ப ஆராதனை
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

இந்நூல்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதுங்கள்.

**இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை**
**57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004**
**தமிழ்நாடு, இந்தியா**

**கிருபை இலக்கிய சேவை**
**19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6**
**ஸ்ரீ லங்கா**

*(4) கிருபையின் சாதனங்களில் ஒன்றான திருவிருந்தில் கலந்துகொண்டு கிறிஸ்துவின் பரிகாரப் பலியை நினைவுகூர்ந்து அவரை மகிமைப்படுத்தும் வசதியேற்படுத்தித் தந்திருக்கிறார். திருவிருந்தின் மூலம் சபை மக்கள் கிறிஸ்து கல்வாரியில் செலுத்திய பரிகாரப்பலியையும், அவருடைய தியாகத்தையும் அன்போடும் விசுவாசத்தோடும் நினைவுகூருகிறார்கள். அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் தங்களுடைய விசுவாசத்திலும், சக விசுவாசிகளுடனான ஐக்கியத்திலும் உறுதிபெறுகிறார்கள். இந்த உலகத்தில் வாழ்கின்ற நாட்கள் முழுவதும் கிறிஸ்தவர்கள் திருச்சபையில் வாழ்ந்து திருவிருந்து பெற்றுக்கொள்ளுவது அவர்களுடைய விசுவாச வாழ்க்கைக்கும், கர்த்தரை மகிமைப்படுத்துவதற்கும் அவசியமானது. இதைச் செய்யாமல் ஒருவன் கிறிஸ்தவன் என்ற பெயரோடு வாழ முடியாது.*

*திருச்சபை மட்டுமே ஆத்துமாக்களுக்கு திருவிருந்தை அளிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. ஆத்துமாக்கள் கூடிவருகிறபோது மட்டுமே திருவிருந்து ஓய்வு நாளில் அளிக்கப்பட வேண்டும். திருச்சபை யோடு தங்களை இணைத்துக் கொண்டு ஏனைய ஆத்துமாக்களோடு ஐக்கியத்தில் வருகிறவர்களே திருவிருந்தில் கலந்துகொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பவுல் அப்போஸ்தலன் 1 கொரி. 11ம் அதிகாரத்தில் தெளிவாக விளக்கியிருக்கிறார். திருவிருந்தின் மூலம் எந்த மேஜிக்கும் நிகழ்வதில்லை. விசேஷமாக நமக்குள் ஏதாவது நடக்கும் என்று நினைத்து நாம் ஒருபோதும் திருவிருந்தில் பங்குகொள்ளக்கூடாது. திருவிருந்தைப் பற்றிய தெளிவான அறிவு கிறிஸ்தவர்களுக்கு இருப்பது அவசியம். மெய்க் கிறிஸ்தவர்கள் மட்டுமே, அதாவது கிறிஸ்துவில் மெய் யாக இரட்சிப்பை அடைந்தவர்கள் மட்டுமே திருவிருந்தில் கலந்துகொள்ள வேண்டும். அதுவும் திருச்சபையில் ஞானஸ்நானத்தைப் பெற்று அதோடு தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கே திருவிருந்து கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில், இவர்களே தாங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் என்று அறிவித்து சபையை நாடிப் போதகர்களுக்கு தங்களை ஒப்புவித்து தங்களுடைய விசுவாசத்தின் அடையாளமாகவும், கீழ்ப்படிதலின் அடையாளமாகவும் ஞானஸ்நானத்தைப் பெற்று முறை யாக திருவிருந்தில் கலந்துகொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். திருச்சபைக்குத் தொடர்ந்து வராமலும், நிலையான கிறிஸ்தவ வாழ்க் கையை நடத்தாமலும், இருந்திருந்து சபையில் தலையைக் காட்டுகிறவர் களுக்கு ஒருபோதும் திருவிருந்து கொடுக்கக்கூடாது. வருகிறவர்கள் போகிறவர்களெல்லாம் கோவில் பிரசாதம் பெற்றுக் கொள்ளுகிறதைப் போல திருச்சபையில் திருவிருந்து கொடுக்கப்படக்கூடாது.*

*(5) திருச்சபையில் சக அங்கத்தவர்களோடு ஐக்கியத்தில் வந்து வளரும்படிச் செய்கிறார். இந்த உலகத்தில் கிறிஸ்தவன் தனிமையில் வாழ முடியாது. கிறிஸ்துவின் சரீரத்தில் பல அங்கங்கள் இருக்கின்றன. கிறிஸ்து ஆத்துமா வுக்கு இரட்சிப்பை அளிக்கும்போது தன்னுடைய சரீரத்தோடு அந்த ஆத்துமாவை இணைத்துக்கொள்ளுகிறார். அதற்கு அடையாளமாக இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டுள்ள ஆத்துமாக்கள் வேத போதனை*

*யின்படி கிறிஸ்துவின் சரீரமாகிய உள்ளூர் திருச்சபைகளை நாடி அவற்றோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டுமென்று வேதம் எதிர்பார்க்கிறது. கிறிஸ்தவர்கள் உள்ளூர் சபைகளில் சக கிறிஸ்தவர் களோடு ஐக்கியத்திலும், ஜெபத்திலும் வருவது அவசியம். புதிய ஏற்பாடு முழுவதும் அதை எழுதியிருக்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் சபைகளில் இருந்து கூடி வாழ வேண்டிய வாழ்க்கையைப் பற்றி அடிக்கடி எழுதியிருக் கிறார்கள். 1 கொரி. 12ல் பவுல் அந்த சபையில் விசுவாசிகள் பலராக இருந்தபோதும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள் என்றும், பலமுள்ளவர்கள் பலவீனர்களை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவசிய மான பல போதனைகளைத் தந்திருக்கிறார். அத்தோடு. ஒருவருக்கொருவர் சபைகளில் நாம் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் புதிய ஏற்பாடு தெளிவாக விளக்குகிறது. சபையில் ஏனைய ஆத்துமாக்களின் மீது அன்பு காட்டுவதும், அவர்களை நம் வீடுகளுக்கு அழைத்து விருந்துபசாரம் செய்வதும், அவர்களோடு இணைந்து ஜெபத்தில் ஈடுபடுவதும், அவர்களோடு சேர்ந்து சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதும், ஆவிக்குரிய பல காரியங்களில் சபைகளில் அவர்களோடு இணைந்து ஈடுபடுவதும் போன்ற பல கடமைகளை நாம் சக அங்கத்தவர்களோடு சேர்ந்து செய்ய வேண்டும். கிறிஸ்தவ ஐக்கியத்தையும் நாம் சபையில் பெலப்படுத்த வேண்டும். கிறிஸ்தவ ஐக்கியத்துக்கு தடையாக இருக்கும் செயல்களை அறவே வெறுக்க வேண்டும். சக கிறிஸ்தவ சகோதர்களைப் பற்றி வீண் பேச்சு பேசுவதையும், அப்படிப்பட்ட பேச்சுக்களைக் காது கொடுத்து கேட்பதையும் வெறுக்கப் பழக வேண்டும்.*

*இதையெல்லாம் ஒரு கிறிஸ்தவன் தனிமையில் வாழ்ந்து செய்ய முடியாது. திருச்சபைக்கு வெளியில் இருந்தும் ஒருவரும் செய்ய முடியாது. இதையெல்லாம் செய்யாமல் ஒருவன் பரிசுத்தத்திலும், ஐக்கியத்திலும் வளர முடியாது. கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக இருக்கிறேன் என்று பறை சாற்றிக்கொண்டு அந்த சரீரத்தின் வெளிப்பாடாக உலகத்தில் இருக்கும் உள்ளூர் சபைகளை நிராகரிக்கிறவர்கள் வேதம் தெரியாதவர்கள் மட்டுமல்ல, வேத போதனைகளுக்கெல்லாம் விரோதமாக நடந்துகொள்ளு கிறவர்களாக இருக்கிறார்கள்.*

*(6) நம்முடைய ஆவிக்குரிய வரங்களை திருச்சபை மூலம் பயன்படுத்தி சபை வளர்ச்சிக்குத் தேவையானவற்றைக் கிறிஸ்து செய்கிறார். கிறிஸ்து சுவிசேஷ ஊழியம் வளரவும், தன்னுடைய திருச்சபை வளரவும் தன்னுடைய மக்களைப் பயன்படுத்தி வருகிறார். திருச்சபை வளர்சிக்குத் தேவையான வரங்களை அவர் ஆத்துமாக்களுக்கு அளித்து அவை சபை மூலமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவிடம் இருந்து ஒரு வரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறான். ஒரு வரமாவது இல்லாத கிறிஸ்தவன் உலகத்தில் இல்லை. வரம் என்பது கிறிஸ்துவின் கிருபையின் மூலமாக நாம் செய்யக் கூடிய ஆவிக்குரிய காரியம். அன்பு காட்டுவது அவற்றில் ஒன்று (1 கொரி. 13). தனக்கு அந்த வரம் இல்லை என்று ஒரு கிறிஸ்தவனாவது சொல்ல முடியாது. அநாவசியமாக வரங்களை நாடி ஓடிக் கொண்டிராது கிறிஸ்த*

*வர்கள் தங்களால் செய்ய முடிந்ததையெல்லாம் சக சகோதர்களுக்கும், திருச்சபைக்கும் செய்ய வேண்டும். தங்களுடைய நேரத்தையும், பணத்தை யும், உழைப்பையும் சபை வளர்ச்சிக்கு அளிக்க வேண்டும். அதை ஏதோ ஒரு வகையில் செய்ய முடியாதவன், செய்யாதவன் கிறிஸ்தவனாகவே இருக்க முடியாது. புறஜாதியார் உயிரில்லாத, பேச முடியாத கல்லைத் தெய்வமாக நினைத்து உயிரையே அதற்குக் கொடுத்து பணி செய்கிறார்கள். மூளையில்லாத அவர்களுக்கு இருக்கும் அக்கறையும், வாஞ்சையும், ஆர்வமும் ஆயிரம் மடங்கு அதிகம் கண் திறக்கப்பட்டிருக்கிற நமக்கு இருக்க வேண்டும்.*

*சுவிசேஷத்தைச் சொல்லுவது திருச்சபைக்குக் கர்த்தர் இட்டிருக்கும் கட்டளை (மத்தேயு 28). திருச்சபைப் போதகர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைத் தவிர சபை மக்கள் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை எந்த வகையிலாவது எல்லோருக்கும் அறிவிக்கும் கடமையைக் கொண் டிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் பிரசங்கிகளாக வேண்டியதில்லை. வீட்டில் குடும்பத்தவர்களுக்கு அவர்கள் சுவிசேஷத்தைச் சொல்ல வேண்டும். வேலைத்தளத்தில் இருப்பவர்களிடம் நட்புக்காட்டி சுவிசேஷ த்தை அவர்களுக்கு ஞானத்தோடு சொல்ல வேண்டும். இதைத் தவிர திருச்சபைக் காரியங்களில் ஊக்கத்தோடு பங்கு கொண்டு தங்களுடைய பங்கு என்ன என்று ஆராய்ந்து பார்த்து அதை நிறைவேற்ற வேண்டும். வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளி போல் ஞாயிற்றுக்கிழமை சபைக்கு வந்துபோய்க்கொண்டிருப்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளக் கூடாது. அதைத்தான் இன்று அநேகர் செய்து வருகிறார்கள்.*

*திருச்சபை பல கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. அதன் கற்கள் நாமே. அதில் இருக்கும் ஒவ்வொரு கல்லுக்கும் ஒரு கடமை இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும். எனக்கு வேலைத் தளத்தில் வேலை அதிகம், வீட்டில் சின்னக் குழந்தைகள் இருக்கிறார்கள், பல ஜோலிகள் இருக்கின்றன என்றெல்லாம் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்த மெய் விசுவாசிகள் சொல்லிக் கொண் டிருக்க மாட்டார்கள். எத்தனை ஜோலிகள் இருந்தாலும் தாங்கள் செய்ய வேண்டிய பணிகளை அவர்கள் செய்து முடிக்கத்தான் செய்வார்கள். ஏனென்றால், அந்தக் கிருபையை அவர்கள் கிறிஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தன்மையின்படி அதைச் செய்யாமல் இருக்க முடியாது. மீன் நீத்தத்தான் செய்யும். அதற்கு நீச்சல் கற்றுக்கொடுக்கத் தேவையில்லை. நீந்தும்படி அதற்கு போதனை செய்யவேண்டிய அவசியமில்லை. நீந்த முடியாத மீனாக இருந்தால் அது செத்துப்போன மீனாக மட்டுந்தான் இருக்க முடியும். அதுபோல கிறிஸ்தவன் தான் பெற்றுக்கொண்டிருக்கிற கிருபையின்படி நடக்காமல் இருக்கமாட்டான். கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் செய்ய வேண்டியதை செய்யாமல் இருக்கமாட்டான். எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, தன் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொண்டு, வீட்டிலும், வேலைத்தளத்திலும், திருச்சபையிலும் எல்லாப் பணிகளையும் சரிவர அவன் செய்துமுடிப்பான். அவற்றைக் கர்த்தரின் துணையோடு செய்து*

முடிப்பான். அவன் நீந்துகிற மீனாக இருப்பான்.

இதுவரை கிறிஸ்து தன்னுடைய சபை மூலம் நம்முடைய ஆத்மீக வளர்ச்சிக்காக என்னென்ன வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார் என்று பார்த்திருக்கிறோம். இதையெல்லாம் நிராகரித்துவிட்டு நம்மால் எப்படி விசுவாசத்தில் வளர முடியும்; உயர முடியும்? செடி வளர தண்ணீர் எப்படி அவசியமோ அதுபோல நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர இதுவரை நாம் பார்த்துள்ளவையெல்லாம் மிகவும் அவசியம். இவையில்லாமல் நாம் ஆவியில் உயிர்வாழ முடியாது. இவற்றை அறிந்தும் அறியாமலும் வாழ்க்கை யில் பின்பற்றாதவர்கள் மிகவும் மந்தமான ஆவிக்குரிய பெலனற்ற வாழ்க்கையை மட்டுமே வாழ முடியும். அத்தோடு, குடும்பஸ்தர்கள் தங்களு டைய குடும்பத்தை சபை வாழ்க்கையில்லாமல் கிறிஸ்தவ விசுவாசத்தில் எவ்வாறு வளர்க்க முடியும்? அவர்களுடைய பிள்ளைகள் சுவிசேஷத்தைக் கேட்டு எப்படி மனந்திரும்ப முடியும்? மனைவிமார் ஆவிக்குரிய வாழ்க்கை யில் எவ்வாறு வளரமுடியும்? சுயநலம் அதிகரித்துப் போய் சபையில் தங்களை இணைத்துக்கொள்ளாமல் சுவிசேஷ ஊழியம் செய்கிறேன் என்று தனியாக ஊர் சுற்றிக் கொண்டிருக்கிற எத்தனை பேருடைய குடும்பங்கள் சீரழிந்து ஆத்மீகவிருத்தியில்லாமல் இன்று இருந்து வருகின்றன என்பது நமக்குத் தெரியாதா என்ன! அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் வாழ்க்கையில் சபை என்பதே என்னவென்று அறியாமலும், சபை வாழ்க் கையை ருசி பார்க்காமலும் வளருகிறபோது அவர்கள் பரிசுத்தத்தில் வளர்ந்து பரலோகம் போவதற்கு எங்கே வழி இருக்கிறது? "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்காதே' என்று கர்த்தரை அறியாத இந்துகூட அவனுடைய கல் தெய்வமிருக்கும் கோவிலுக்குத் தன் வாழ்க்கையில் அத்தனை முக்கியத்துவமளிக்கிறான். ஜீவனுள்ள நம் கர்த்தர் நாம் பரிசுத்தத் திலும், கர்த்தரின் ஐக்கியத்தில் வளருவதற்காகவும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் விசுவாசத்தில் நாம் நிலைத்திருப்பதற் காகவும், சத்தியம் போதிக்கப்பட்டு ஆத்துமாக்கள் வந்து சேரவும் தன்னு டைய திருச்சபையை இந்த உலகத்தில் நிறுவியிருக்கிறார். அந்தத் திருச்சபை இல்லாத இடத்தில் இருப்பது தவறு, அது இல்லாமல் நாம் விசுவாசத்தில் வளர முடியாது என்ற உணர்வே இல்லாமல் வாழ்கிறவர்களை மெய்யான விசுவாசிகள் என்று எந்த அடிப்படையில் நாம் சொல்ல முடியும்.

நண்பர்களே! சபையில்லாமல் இதுவரை வாழ்ந்திருக்கிறீர்களா? உடனடி யாக நல்ல சபையொன்றை நாடிச் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுடைய வாழ்க்கை சிறக்கவும், குடும்பம் சிறக்கவும் அது அவசியம். சுயநலத்தால் பணத்துக்கும், உலகசுகத்துக்கும் ஆசைப்பட்டு சபையைவிட்டு விலகிப் போய் சபையில்லாத இடங்களில் இருந்து உங்களை அழித்துக் கொள்ளா தீர்கள். கர்த்தர் நமக்கு அளிக்கக்கூடிய அத்தனை ஆசீர்வாதங்களும் சபை வாழ்க்கையில் சிறக்காமல் நமக்கு வந்து சேரும் என்று கனவு கானாதீர்கள். இயேசு தன் மணவாட்டியான சபையை உயிருக்குயிராக நேசிக்கிறார். அவருடைய சபையில் இருந்து வாழத் தயங்குபவர்களை அவர் நிச்சயம் நேசிப்பார் என்று நம்மால் எப்படிச் சொல்ல முடியும்?

# சிலுவைக் குறி போடலாமா?

சில பாப்திஸ்து போதகர்கள் தங்களிடம் ஆசீர்வாதத்திற்காக வருகிறவர்களுக்கு நெற்றியில் சிலுவைக் குறியிடுவதை நான் பார்த்திருக்கிறேன். பிறந்த நாளிலும், திருமண வைபவத்திலும், வேறு விசேஷ நிகழ்ச்சிகளிலும் ஆத்துமாக்களின் நெற்றியில் விரலை வைத்து சிலுவைக்குறியிடுவதோடு தாலியையும் தொட்டு அதிலும் சிலுவைக் குறியிடுவார்கள் இந்தப் போதகர்கள். எல்லா பாப்திஸ்து போதகர்களும் இப்படிச் செய்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இரண்டு இடங்களில் இதை நான் நேரடியாகவே பார்த்திருக்கிறேன். இந்த முறை சரியா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

சிலுவைக்கு மதிப்புக் கொடுத்து அதில் ஏதோவொரு தெய்வீகம் இருப்பதுபோல் எண்ணி அதைத் தோளில் சுமப்பது, சபையில் வைத்து வணங்குவது, கைகளில் துணியால் சுற்றி வைத்திருப்பது, தலையணைக் கடியில் வைத்துக் கொண்டு படுப்பது, அதைக் கையில் வைத்து மற்றவர்களை ஆசீர்வதிப்பது போன்ற செயல்களை ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் செய்து வருகிறார்கள். ரோமன் கத்தோலிக்க மதம் என்றோ வேதத்தைத் தூக்கியெறிந்துவிட்டு சாத்தானின் ஊழியக் காரனாக மாறி முற்றிலும் கிறிஸ்துவுக்கு எதிரான ஒரு மதமாக இன்றைக்கு உலகில் இருந்து வருகிறது. யாரோ ஏற்படுத்தி வைத்த ஒரு பாரம்பரியச் செயலாக சிலுவைக்கு தேவையில்லாத தெய்வீகத்தை சூட்டி அதைப் பரிசுத்தமான ஒரு பொருளாக நினைத்து பயபக்தியோடு அதை வணங்கி வருகிறது. கத்தோலிக்க மதத்தில் இருந்து இந்த முறை ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்ட் சபைகளுக்கும் பரவியிருப்பதும் நாமறிந்த உண்மை. இந்த சபைப்பிரிவுகளும் வேதபூர்வமாக நடப்பதை என்றோ தள்ளி வைத்து விட்டன. எனவே, சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து நடக்கும் வழக்கம் ரோமன் கத்தோலிக்க மதத்தில் இருந்து வந்த ஒரு முறையென்பது தெளிவாகத் தெரிகின்ற உண்மை.

கத்தோலிக்க மதத்தோடு தொடர்பில்லாத சுவிசேஷ சபைகள் பொதுவாக கர்த்தரின் வேதத்துக்கு மதிப்புக்கொடுத்து அதன் வழிமுறைகளின்படி நடந்து வருகின்ற, நடந்து வர வேண்டிய சபைகள். இந்த சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்த பாப்திஸ்து சபைப் போதகர்கள் சிலுவைக் குறியிடுவது முற்றிலும் தவறானது. உண்மை தெரியாமல் இவர்கள் ரோமன் கத்தோலிக்க மத வழக்க முறையைக் கையாண்டு வருகிறார்கள். எல்லா பாப்திஸ்து சபைப் போதகர்களும் இதைச் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், அவர்களில் சிலர் என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்பதே தெரியாமல் சிலுவைக் குறியிட்டு வருகிறார்கள்.

இது அவர்களுக்கு மத்தியில் இருக்கும் வேதபோதனைகள் சம்பந்தமான பெருங்குழப்பத்தையே காட்டுகிறது. ரோமன் கத்தோலிக்கப் பிசாசின் செயல் முறை என்ற உணர்வே இல்லாமல் அந்த முறையை சுவிசேஷ சபைப் போதகர்கள் செய்வது மிகவும் வெட்கப்பட வேண்டிய, துயரமளிக்கும் ஒரு செயல்.

வேதம் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்று விளக்குகிறது. சிலுவையில் அன்றைக்கு இயேசு மட்டும் அறையப்படவில்லை. கொடியவர்களான வேறு இரு சாதாரண மனிதர்களும் அறையப்பட்டார்கள். இயேசுவின் சிலுவை மட்டும் விசேஷமான மரத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. இயேசு அதில் கையை வைத்துத் தூக்கியதாலோ, முதுகில் சுமந்ததாலோ அல்லது அதில் மரித்ததாலே அந்த சிலுவை மரம் அன்று எந்தவிதமான புனிதத் தன்மையையும் அடையவில்லை. இயேசு மரித்த பிறகும் இது தொடர்ந்து சாதாரண மரமாகவே இருந்தது. இயேசு அதில் மரித்ததால் அதற்கு விசேஷ மதிப்பளித்து அவருடைய சீஷர்கள் அதைப் பாதுகாத்து தெய்வீகம் கொண்டதாக அதைப் பயன்படுத்தினார்கள் என்று வேதத்திலோ, வரலாற்றிலோ நாம் வாசிப்பதில்லை. அப்போஸ்தலர் காலத்து ஆதித்திருச் சபையில் சிலுவைக்குப் பெருமதிப்பளிக்கப்பட்டு ஆராதனையில் அதற்கு விசேஷ இடமளிக்கப்பட்டதாகவும் புதிய ஏற்பாட்டில் நாம் எங்கேயும் வாசிப்பதில்லை. இயேசுவும், தான் மரித்தபிறகு சிலுவைக்கு விசேஷ இடத்தை நம் வாழ்க்கையில் கொடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடவில்லை. ஆக மொத்தத்தில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான விளக்கங்களும் சிலுவை பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் வாசிப்பதில்லை. உண்மை நிலை இப்படியிருக்க சிலுவைக்குப் பெருமதிப்பளித்து அதை வணங்குவதும், கையிலும், காதிலும், கழுத்திலும் மாட்டிக்கொள்ளுவதும், வீட்டில் வைத்து வணங்குவதும், போதகர்கள் சிலுவைக் குறியிடுவதும் எத்தனை பெரிய பாவமான செயல். ஏன் இது பாவமான செயல்? கிறிஸ்துவின் போதனைகளைத் தவிர வேறு எந்தக்காரியத்தையும் பின்பற்றுவதற்கு வேதம் தரும் பெயர்தான் பாவம். அத்தோடு கர்த்தரின் பத்துக் கட்டளைகள் மிகவும் தெளிவாக, நாம் கர்த்தரை எதை வைத்தும் வணங்கக்கூடாது என்று எச்சரித்துக் கட்டளையிடுகிறது. கர்த்தருக்கு மட்டுமே உரிய தெய்வீகத்தை அவரால் படைக்கப்பட்ட எதோடும் தொடர்பு படுத்திப் பார்க்கக் கூடாதென்றும் வேதம் சொல்லுகிறது. அப்படியிருக்க கர்த்தர் எவரோடும், எதோடும் பகிர்ந்துகொள்ளாத அவருடைய தெய்வீகத்தை சிலுவைக்கு நாம் கொடுக்கலாமா? அது எத்தனை பெரிய பாவம் என்பதை சிறிது சிந்தித்துப் பாருங்கள். அதுவும் போதகர்கள் சிலுவைக் குறியிட்டு ஆத்துமாக்களின் உள்ளத்தில் தவறான எண்ணங்களை உருவாக்கலாமா? மற்றவர்களின் விசுவாசத்திற்கு நாம் எந்தவிதத்திலும் தடையாக இருந்து விடக்கூடாதென்று இயேசு எச்சரித்திருக்கிறார். இனியாவது, இதை வாசித்த பிறகாவது சிலுவைக்குத் தனி மதிப்புக் கொடுக்கிறவர்கள் கர்த்தருக்கெதிரான தங்களுடைய பாவச் செயலை நீக்கிவிடுவது நல்லது. சிலுவைக் குறியிடுவதை உடனடியாக நிறுத்துவது நல்லது.

# வேஷம் விலகியது

அன்று சபையில்
அதிரடியாய்ப் பேசினார்
அருமைப் பிரசங்கி
சாதியும் பொய்யாம்
குலம் கோத்திரமும் நஞ்சாம்
விசுவாசிக்கு தேவை
விசுவாசியே மணத்துணையாய்
என்று விளாசினார்
வீர முழக்கமிட்டார்
ஆகா! என்றார்கள்
அமர்ந்திருந்து கேட்ட
அருமை ஆத்துமாக்கள்
இவரல்லோ பிரசங்கி
சீர்திருத்த வேந்தன்
என்றெல்லாம் எண்ணி
இதயம் குளிர்ந்தார்கள்

பிரசங்கம் முடிந்தது
சபையும் கலைந்தது
வாசற் படியில்
வழி மறித்து நின்றான்
வாலிபன் ஒருவன்
அவனைப் பார்த்து
என்னப்பா வேண்டும்?
என்றார் கனிவாக
எங்கள் பிரசங்கி
அய்யா! உங்கள்
மகளுக்கு நான் காதலன்
குப்பத்துக் குடும்பம்
அப்பா கைக்கூலி
முன்னாள் நான் முஸ்லீம்
இப்போதோ விசுவாசி

இயேசுவுக்கு பக்தன்
இருவரும் நேசிக்கிறோம்
இதயத்தில் ஒன்றுபட்டோம்
திருமணத்தில் இணையவும்
வேண்டும் உங்கள் ஆசி
என்றான் பணிவாக

வந்ததே கோபம்
எங்கள் பிரசங்கிக்கு
முகமெல்லாம் சிவக்க
உடலெல்லாம் அதிர
வாய்க்கு வந்தபடி
வாயாரத் திட்டி அவனை
வாசல்படி நோக்கி
விரட்டினார் வேகமாய்
ஊருக்கெல்லாம் உபதேசம்
தனக்கு மட்டும் தனிநீதி
வெட்கங்கெட்ட பிரசங்கியின்
வேஷம் விலகியது
வினாடிப் பொழுதில்
அன்று . . .

*– சுபி*

''ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ (*இன்று வாரத்தின் முதல் நாள்*) உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரத்தியானாலும், உன் குமாரனானாலும், உன் வேலைக்காரனானாலும், வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண் டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.''
- (யாத்திராகமம் 20:8-11)

# எண்ணங்கள்!




உங்களோடு கடிதத்தின் மூலம் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்ததை நினைத்து கர்த்தரைத் துதிக்கிறேன். ஏனென்றால், உங்கள் பத்திரிகையைக் குறித்தும், உங்களைக் குறித்தும் என் நண்பர் ஒருவர் மூலமாகக் கேள்விப்பட்டேன். 2004ம் ஆண்டு ஜூலை-செப்டம்பர் மாதப் பத்திரிகை எனக்குக் கிடைத்தது. அதிலிருந்த ஒவ்வொரு தலைப்புகளும் எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தன. 'உப்புச்சப்பில்லாத தியானச் செய்திகள்' என்ற தலைப்பு என்னை அறியாமையில் இருந்து விடுவித்தது. மேலும் பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிய உதவியாக இருந்தது. இச்செய்தியின் மூன்றாம் பகுதி மட்டுமே எனக்குக் கிடைத்தது. இதன் ஏனைய பகுதிகளையும், உங்கள் காலாண்டுப் பத்திரிகையையும் எனக்குத் தொடர்ந்து அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். – ***ஜி. ராஜா, தமிழ்நாடு***



நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்பாகவே திருமறைத்தீபம் பத்திரிகையை நண்பர் ஒருவர் மூலமாகக் கையில் கிடைக்கப் பெற்றேன். ஆனாலும் அப்போது இதன் முழுப் பயன்பாட்டையும் தெரிந்து கொள்ளவில்லை. பிறகு பத்திரிகையை ஏற்கனவே வாசித்திருந்த நண்பர்கள் அடைந்த பயனைக் கூறக்கேட்டு மறுபடியும் பத்திரிகையைப் பெற்று வாசித்தேன். பத்திரிகையில் வெளிவந்துள்ள பல ஆக்கங்கள் மிகவும் பிரயோஜனமாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்தன. இப்படிப்பட்ட பத்திரிகை தமிழில் கிடைத்திருப்பதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். ஆவியில் அனலில்லாதவர்களாய் தங்கள் மனதுக்கும் சிந்தனைக்கும் அடுத்தவைகளை ஏனோதானோவென்று (அப்போஸ். 18:25ம் வசனத்திற்கு மாறாக) பலர் போதகம் பண்ணிக் கொண்டு வரும் இந்நாட்களில் சீர்திருத்தம் எங்கு எப்படி யார் மூலம் ஏற்பட்டது, வேதம் விளைவித்த காரியங்கள் என்ன என்று தேசங்களையும், பட்டணங்களையும் வரலாற்றில் இருந்து எடுத்துக்காட்டி வெளிவரும் தொடர் கட்டுரைகளும், "சிந்தனை வளர வாசிப்பு அவசியம்" போன்ற கட்டுரைகளும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி பிரயோஜனமளிக்கின்றன. சத்தியத்தின் பாதையில் தாங்கள் காட்டிவரும் ஆர்வம் மற்றும் முயற்சிகளுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். தாங்கள் இன்னும் பல ஆக்கங்களையும், ஜாண் பனியன், மார்டின் லூத்தர் போன்ற சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் (வில்லியம் கேரி, ஸ்பர்ஜன் புத்தகங்களைப் போன்று) புத்தகமாக வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகையை எனக்கு நேரடியாகக் கிடைக்கும்படி அனுப்பித் தாருங்கள். பழைய பிரதிகளையும் அனுப்பித் தாருங்கள். – ***எஸ். சந்திரன், தமிழ்நாடு***

*[வாசகர்கள் தொடர்ந்து அன்போடு எழுதுகின்ற கடிதங்களுக்காக மிகவும் நன்றி. உங்களுடைய கடிதங்கள் மூலமாகத்தான் பத்திரிகையின் மூலம் நீங்கள் அடைந்து வருகின்ற பயன்களைப் பத்திரிகை ஆசிரியராகிய நானும் என்னோடு இணைந்து உழைப்பவர்களும் அறிந்துகொள்ள முடிகின்றது. உங்கள் ஒவ்வொருவருடைய கடிதத்திற்கும் பதிலெழுத வேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஆனால், அதைச் செய்ய முடியாதபடி வேலைப்பளு என்னைத் தடுத்துவிடுகின்றது. உங்கள் கடிதங்கள் ஒவ்வொன்றையும் நான் சாதாரணமாக நினைத்துவிடாமல் தவறாது வாசித்து கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன். உங்கள் ஒவ்வொருவருடைய முகத்தையும் இந்த உலகத்தில் நான் பார்க்க முடியாது போய்விடலாம். ஆனால், கிறிஸ்து தந்திருக்கும் ஜீவனும், சத்தியமும் நம்மைப் பரலோகத்தில் சந்திக்க நிச்சயம் உதவும். அதுவரை சத்தியத்தை அறிகிற அறிவிலும், அதைச் செயல்படுத்துகிற பணியிலும் உறுதியோடு உழைப்போம்; கர்த்தரின் மகிமையை நாடுவோம். – ஆசிரியர்.*


# நமது வெளியீடுகள்




ஆதிசபையின் அற்புத வரங்கள்




சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்




வில்லியம் கேரி




பத்துக் கட்டளைகள்

**கிடைக்குமிடம்:**

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**

**57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004**

**தொலைபேசி எண்: 0452 - 6505810**

**கிருபை இலக்கிய சேவை**

**19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா**

மலர் 13 ஜீலை - செப்டெம்பர் 2007 இதழ் 3

1. ஜோர்ஜ் முல்லர் (George Muller)

2. பிரான்ஸின் ஹியூகனோக்கள் (French Huguenots)

3. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

4. நான் ஏன் ரோமன் கத்தோலிக்கன் இல்லை!

5. சபை வாழ்க்கை இல்லாத கிறிஸ்தவ வாழ்க்கையா!

6. சிலுவைக் குறி போடலாமா?

7. வேஷம் விலகியது - கவிதை

8. எண்ணங்கள்!

Terau Print